

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 127 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 1 – ஞாயிற்றுக்கிழமை 17 டிசம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 127: Thiruvalluvar Year - 2054 - Margazhi 1- Sunday 17 December 2023 - Chennai 16 Pages ₹ 5.00


# பேரிடரில் மீண்டோம்... சேலத்தில் சந்திப்போம்!



## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

வரலாறு காணாத கனமழையை மிக்ஜாம் புயலின் எதிரொலியாக அல்ல.. அல்ல.. இடியொலியாக எதிர்கொண்டன சென்னையும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களும்!

எத்தகைய இடர் வந்தாலும் அதிலிருந்து மக்களைக் காப்பதில் அக்கறையும் பொறுப்பும் கொண்ட ஆட்சியை நடத்தி வருகின்ற காரணத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் சென்னை மாநகரத்தின் முக்கிய பகுதிகள் பலவற்றிலும் மழைநீர் வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டு, மற்ற இடங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில்தான் மிக்ஜாம் புயலையும் கனமழையையும் எதிர்கொள்ள நேரிட்டது.

ஒரே நாளில் இடைவிடாமல் கொட்டித் தீர்த்த மழையின் அளவு 40 சென்டி மீட்டருக்கு மேல் என்பதால் சென்னை கடந்த 50 ஆண்டுகளில் காணாத பேரிடரை எதிர்கொண்டது. டிசம்பர் 4ஆம் நாள் முழுவதும் கனமழை பெய்த நிலையில், மறுநாள் (டிசம்பர் 5) அதிகாலைக்குள்ளாக ஏறத்தாழ பெரும்பாலான பகுதிகளில் வெள்ளநீர் வடிந்திருந்தது. அதற்கு காரணம், திராவிட மாடல் அரசின் மழைநீர் வடிகால் பணிகளும், மழை பெய்த நேரத்திலும் மாநகராட்சி மற்றும் அரசுத் துறை பணியாளர்களின் அயராத உழைப்பும்தான்.

**2015ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் செம்பரம்பாக்கம் ஏரியின் தண்ணீரை முறையான வகையில் திறக்காமல், ஒரே இரவில் அளவுக்கதிமாகத் திறந்து விட்டு உருவாக்கப்பட்ட செயற்கை வெள்ளத்தின்போது சென்னைக்குள்ளேயே வாகனங்கள் வர முடியாத நிலை இருந்தது. ஆனால், மிக்ஜாம் புயல் சென்னையைக் கடந்த சில மணிநேரங்களிலேயே செங்கல்பட்டு முதல் சென்னை வரையிலான ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து சீரானது. பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் சீரான நிலைதான்.**

அதே நேரத்தில், சென்னைப் புறநகரின் ஏரிகள் சூழ்ந்த பகுதிகளிலும், கடல் மட்டத்துக்கு இணையான சென்னையின் தாழ்வான பகுதிகளிலும் மழை நீர் வெள்ளமாகத் தேங்கியிருந்ததை அறிந்து, அங்குள்ள மக்களுக்கு உதவிடவும், அவர்களை மீட்கவும், அந்தப் பகுதியில் வெள்ளநீரை வடியச் செய்து, இயல்பு நிலை திரும்பிடவும் அரசு இயந்திரங்கள் முழுமையான அளவில் தங்கள் பணிகளை மேற்கொண்டன.

சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் கழகத்தினர் கழகப் பணியாற்றிட வேண்டும் என்று உங்களில் ஒருவனான நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று, கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, கழக அமைப்புகளின் நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தொடர்ந்து களப்பணியாற்றி மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து, உடை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

**தண்ணீரை வெளியேற்றுவதற்கும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து மக்களை மீட்பதற்கும் கழக நிர்வாக அமைப்பினரும், சார்பு அணியினரும் முழுவீச்சில் பணியாற்றி, மக்களின் துயர் துடைத்தனர். மழை அளவையும் அதன் தாக்கத்தையும் கண்காணிப்பு அறைக்கு நேரில் சென்று அங்குள்ள அலுவலர்களிடமும், உதவிக்கான அழைப்பு விடுத்த பொதுமக்களிடமும் பேசிய உங்களில் ஒருவனான நான், என்னுடைய கொளத்தூர் தொகுதியில் தொடர்ச்சியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டேன்.**

> **பேரிடரிலும் அரசியல் செய்யும் குணம் படைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலன் காக்க சிந்தித்து செயல்படும் அரசு, 6000 ரூபாய் நிவாரணம் அறிவித்து, அதற்கானப் பணிகளை முன்னெடுத்துள்ளது. பேரிடரில் உயிர் இழந்தவர்களுக்கான நிவாரணம், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்திலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான தொகை உயர்த்தப்பட்டுள்ளது.**

அதுபோல, இளைஞரணிச் செயலாளரும் இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி தனது சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் கொட்டுகிற மழை நேரத்திலேயே வெள்ளநீரில் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன், நிவாரணப் பணிகளையும் நேரில் மேற்கொண்டார். கழக மருத்துவ அணிச் செயலாளரும் ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் எழிலன் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். சைதாப்பேட்டையிலும் தென்சென்னையின் மற்ற இடங்களிலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் கழகத்தினர் நிவாரணப் பணிகளில் முழுவீச்சாக ஈடுபட்டனர். துறைமுகம் தொகுதியிலும் வடசென்னையின் மற்ற பகுதிகளிலும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் தலைமையில் பணிகள் விரைந்து நடைபெற்றன. சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா அவர்கள் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து மேற்கொண்டார். ஆலந்தூர் தொகுதியிலும் காஞ்சி வடக்கு மாவட்டத்திலும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழக நிர்வாகிகள் பணிகளை மேற்கொண்டனர்.

அண்ணாநகர், அம்பத்தூர், ஆர்.கே. நகர், ஆவடி, உத்திரமேரூர், எழும்பூர், காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி, செங்கல்பட்டு, சோழிங்கநல்லூர், தாம்பரம், தியாகராயநகர், திரு.வி.க.நகர், திருத்தணி, திருப்பெரும்புதூர், திருப்போரூர், திருவள்ளூர், திருவொற்றியூர், துறைமுகம், பல்லாவரம், பூந்தமல்லி, பெரம்பூர், பொன்னேரி, மதுரவாயல், மதுராந்தகம், மயிலாப்பூர், மாதவரம், ராயபுரம், விருகம்பாக்கம், வில்லிவாக்கம், வேளச்சேரி என சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களுக்குட்பட்ட தொகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் அனுப்பி பணிகளை விரைவுபடுத்தினேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் அலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்தேன்.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட சட்டமன்ற உறுப்பினர்களுடன் மேயர், சேர்மன், கவுன்சிலர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் களத்தில் நின்றனர். அவர்களுடன் கழகத்தினர் துணை நின்றனர்.

உங்களில் ஒருவனான என்னுடைய வழிகாட்டுதலில் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான தம்பி டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஐ.டி.விங் நிர்வாகிகள் வார் ரூம் அமைத்து, சமூக வலைத்தளங்கள் வாயிலாக வைக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்து, ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகளையும், மீட்பு நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டனர்.

24X7 என்ற முறையில் பகல்இரவு பாராது செயல்பட்ட இந்த வார் ரூமுக்கு உதவி கேட்டு வந்த மொத்த கோரிக்கைகள் 5 ஆயிரத்து 689 ஆகும். இதில்

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**

## புயல், மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ரூ.6000 நிவாரணத் தொகை!

## வேளச்சேரியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்கி தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, டிச. 17 -**

**மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் வழங்கும் பணியை இன்று சென்னை, வேளச்சேரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

தமிழ்நாட்டில் கடந்த 3 மற்றும் 4ம் தேதி 'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் அதிகனமழை பெய்தது. மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, சென்னை மாவட்டத்தில் அனைத்து பகுதிகள், செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும், திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், பெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூந்தமல்லி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் ஆகிய 6 வட்டங்களில் உள்ள மக்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் யாருக்கெல்லாம் ரூ.6 ஆயிரம் வழங்கப்படும் என்று தமிழக அரசு கடந்த மூன்று நாட்களுக்கு முன் அரசாணை வெளியிட்டது. அதன்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது. நேற்றும் டோக்கன் வழங்கப்பட்டது. டோக்கனில் குறிப்பிட்டுள்ள நாள், நேரத்திற்கு அவர்கள் வழக்கமாக பொருட்கள் வாங்கும் ரேஷன் கடைகளுக்குச் சென்று, ரூ.6,000 நிவாரணத் தொகை பெறலாம். கைரேகை (பயோமெட்ரிக்) வைத்து, உறுதி செய்யப்பட்ட பிறகே பணம் வழங்கப்படும்.

அதேநேரம் ஒன்றிய, மாநில அரசு, பொதுத்துறை நிறுவன உயர் அலுவலர்கள், வருமான வரி செலுத்துவோர், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள், தங்களது வாழ்வாதாரம் பாதிப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் இழப்பு ஏற்பட்டிருந்தால், பாதிப்பு விவரங்களை தங்களது வங்கி கணக்கு விவரத்துடன் தங்கள் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளில் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் அவர்களுக்கு உரிய நிவாரணம் அவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களும் இன்று முதல் ரேஷன் கடைகளில் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகையான ரூ.6,000 உதவித்தொகையை இன்று (17ம் தேதி) முதல் 22ம் தேதி வரை ரேஷன் கடைகளில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம். மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் வழங்கும் பணியை இன்று காலை 10 மணிக்கு சென்னை, வேளச்சேரி அஷ்டலட்சுமி நகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

அதைத்தொடர்ந்து அந்த தொகுதியில் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

பொதுமக்கள் கூட்ட நெரிசலை தவிர்க்க, டோக்கனில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு வந்து பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான வாக்குகளை ஒன்றிணைத்து - நாடாளுமன்றத் தேர்தலில்

# “இந்தியா கூட்டணி” மகத்தான வெற்றி பெறும்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, டிச.17-**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான வாக்குகளை ஒன்றிணைத்து - நாடாளுமன்றத் தேர்தலில் “இந்தியா கூட்டணி” மகத்தான வெற்றி பெறும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு அளித்துள்ள பேட்டியில் உறுதி படக் கூறியுள்ளார்.**



THE HINDU

Saturday, December 16, 2023

CHENNAI

News 13

'Outcome of elections in Hindi heartland has shown that Opposition needs to consolidate anti-BJP votes'

Tamil Nadu Chief Minister says results of the recent polls in three States are a lesson for the Opposition INDIA bloc, but adds that Assembly elections will not have a bearing on the Lok Sabha poll; he says the Centre's appreciation proves that DMK government efficiently handled the aftermath of Cyclone Michaung in Chennai and neighbouring districts; urges Governor to work for welfare of State

INTERVIEW

M.K. Stalin

B. Kolappan

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தி இந்து’ ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டி வருமாறு:-*

**செய்தியாளர்:** *புயலால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட வந்த மத்திய நிபுணர்கள் தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகத்தான் பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் நிவாரணப் பணிகள் குறித்து அரசுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களும் எழுந்துள்ளன. அவை ஒரு புறம் இருக்க நிவாரணப் பணிகள் உங்களுக்குத் திருப்தியை அளிக்கின்றனவா? இன்னும் சிறப்பாகச் செயல்பட்டிருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?*

**தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகள்தான் காரணம்!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒன்றிய அரசின் குழு முழுமையாக வரவேற்றுப் பாராட்டி இருக்கிறது. ‘சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததாலேயே பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது, இல்லையென்றால் பாதிப்பு மிக மோசமாக இருந்திருக்கும்’ என்றும், ‘உரிய நேரத்தில் நீர் திறந்து விடப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது’ என்றும், ‘அதற்காக இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம்’ என்றும் ஒன்றியக் குழு பாராட்டி இருக்கிறது.

இதே கருத்தை, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும் என்னைச் சந்தித்தபோது தெரிவித்தார்கள்.

அரசியல் ரீதியாக ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் எங்களுக்குமான கொள்கை முரண்பாடுகள் அனைவரும் அறிந்ததே. அதனையும் தாண்டி இந்தளவுக்குப் பாராட்டுகிறார்கள் என்றால், தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகள்தான் இதற்குக் காரணம்.

கடுமையான மழை இரண்டு நாட்கள் இடைவிடாது பெய்கிறது. மழை நின்றதும் நிவாரணப் பணிகளை நாங்கள் தொடங்கிவிட்டோம். மறுநாளே போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. பெரும் பாலான பகுதிகளுக்கு மின் இணைப்பானது மூன்று நாட்களுக்குள் கிடைத்துவிட்டது. புறநகரில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக நான்கைந்து நாட்களுக்குள் மற்ற அனைத்துப் பகுதிகளும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டன.

தண்ணீரில் மூழ்கியிருந்த பகுதி மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தோம். அவர்களையும் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து வந்து அமர்த்தினோம். நானே பல்வேறு பகுதிக்குச் சென்றேன். 20 அமைச்சர்கள், 50 ஐ.ஏ.எஸ் - ஐ.பி.எஸ் அதிகாரிகள், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் களத்தில் இருந்தார்கள். வெளிமாவட்டங்கள் அனைத்திலிருந்தும் ஆதரவுக் கரம் நீண்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த நொடி வரையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

புயலுக்கு முன்பும் - புயலின் பிறகும் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பாதிப்பு குறைந்தது. பொதுவாக மக்கள் பணியாற்றும் நாங்கள் மேலும் மேலும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றுதான் நினைப்போம். இன்னும் சிறப்பாகச் செயல்பட்டிருக்க முடியுமா என்று கேட்கிறீர்கள். இன்னும் அதிகமாக மக்களுக்கு உதவவே நான் ஆசைப்படுகிறேன்.

**அதிக அளவு மழை பொழிவே காரணம்!**

**செய்தியாளர்:** *2015-இல் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்தில் இருந்து நீர் திறந்து விடுவதில் ஏற்பட்ட குளறுபடியே பெரும் பிரச்சினையை உருவாக்கியது. ஆனால் ஆட்சியில் அமர்ந்த நாளில் இருந்தே கட்டமைப்புகளை வலுப்படுத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உங்கள் அரசு எடுத்திருந்தும் இத்தகைய இழப்பு ஏற்படக் காரணம் என்ன? இந்த அனுபவத்தில் இருந்து அரசுக்குக் கிடைத்திருக்கும் பாடம் என்ன?*

**மு.க.ஸ்டாலின்:** செம்பரம்பாக்கத்தில் 2015-ஆம் ஆண்டு உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடாத காரணத்தால் - அ.தி.மு.க. ஆட்சியில் சென்னையே மிதந்தது. ஏரியைத்திறந்துவிடுவதற்கான அனுமதியை அம்மையார் ஜெயலலிதா விடம் வாங்குவதற்கு நாள்கணக்கில் காத்திருந்தார்கள் அதிகாரிகள். ஆனால் இப்போது அப்படி அல்ல. உரிய நேரத்தில் தண்ணீரைப் படிப்படியாகத் திறந்து விட்டு, தயார் நிலையில் இருந்தோம். ஆனாலும் வெள்ளம் அதிகமாக வரக் காரணம், மழையின் அளவு அதிகமாக இருந்ததுதான்.

இதுகுறித்து Former MIDS Director டாக்டர் S.ஜனகராஜன் அவர்களுடைய ஊடகப் பேட்டி ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பேட்டியில், “2015 பேரிடர் Man Made Disaster. அது மழை வெள்ளத்தால் ஏற்பட்டது அல்ல. ஆனால் 2023 பேரிடர் கொடூரப் புயல் காரணமாக 36 மணி நேரத்தில் 530 மி.மீட்டர் மழைபெய்த காரணத்தால் ஏற்பட்டது” என்று தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயலானது சென்னையில் இருந்து 100 கி.மீ. தொலைவில் 16 மணி நேரம் நிலை கொண்டிருந்தது. மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. இதுவே, சென்னையில் பரவலாக இடைவிடாது கனமழை பெய்யக் காரணமாயிற்று. 47 ஆண்டுகளில் பெய்யாத மழை, 177 ஆண்டுகளில் மூன்றாவது பெரிய மழை. எனவேதான் தண்ணீர் அதிகம் தேங்கியது. கடல் மட்டம் உயர்ந்து இருந்ததால், போய்ச் சேரும் தண்ணீரை உள்வாங்கவில்லை. இதுவும் இப்போதைய சூழ்நிலைக்குக் காரணம் ஆகும்.

**காலநிலை மாற்றம்தான் நாம் எதிர்கொள்ளும மிகப் பெரிய பிரச்சினை!**

ஒன்றிய அரசிடம் நிதிக் கோரிக்கை வைக்கும் எனது கடிதத்தைப் பிரதமர் அவர்களிடம் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கொடுத்த போது, இதே கருத்தைத்தான் பிரதமர் மோடி அவர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாகக் காலநிலை மாற்ற இயக்கத்தைத் துவக்கி இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அதற்கான சிறப்புக் குழுவையும் அரசு அமைத்துள்ளது. துறையின் பெயரை “சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை” என்று அறிவித்தோம். தமிழ்நாட்டிற்கான காலநிலைத் திட்டத்தை அறிவித்தோம். அவர்களது மாநாட்டில் நானே கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறேன். இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு கவனம் செலுத்தவில்லை.

எனவே மக்கள் தொகையின் அடர்த்தி - மழையின் அளவு - புயல் சீற்றங்கள் - வடிகால் கொள்ளளவு - வெள்ளச் சமவெளிகள் - கடல் மட்டம் - புவி வெப்பமயமாதல் - ஆகிய அனைத்தையும் மனதில் வைத்து திட்டங்களை உருவாக்க வேண்டும். காலநிலை மாற்றம் தான் நாம் எதிர்கொள்ளப் போகும் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கப் போகிறது என்பதை நான் பல நிகழ்வுகளில் சொல்லி இருக்கிறேன். இதையும் மனதில் வைத்து திட்டங்களை உருவாக்க வேண்டும்.

**எந்தப் பணியையும் திட்டமிட்டு செய்யாத அ.தி.மு.க. அரசு!**

**செய்தியாளர்:** *புறநகர்ப் பகுதிகளில் திட்டமிடப்படாத கட்டுமானப் பணிகள் பெருகி விட்டன. நீர் வடிவதற்கு எந்த விதமான வசதியை உருவாக்காமலும் மற்ற அடிப்படை வசதிகளை உருவாக்காமலும் அவற்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டதே வெள்ளம் வீடுகளில் புகுந்தது. இக்குற்றச்சாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** 2011 முதல் 2021 வரையிலான பத்தாண்டு காலத்தில் எந்தப் பணியையும் திட்டமிட்டுச் செய்யவில்லை அ.தி.மு.க. அரசு. அதன் விளைவுகளைத்தான் நாம் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் ஆலோசனைக் குழுவை அமைத்தோம். அவர்களது ஆலோசனைப்படி திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

❖ அடையாறு மற்றும் கூவம் வடிநிலப்பகுதிகளில் உலக வங்கி நிதியில் 44.88 கி.மீ நீளத்திற்கு ரூ.120 கோடி மதிப்பீட்டிலும், சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் 50 கி.மீ நீளத்திற்கு ரூ.255 கோடி மதிப்பீட்டிலும், மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் 59.5 கி.மீ. நீளத்திற்கு ரூ.232 கோடி மதிப்பீட்டிலும், மூலதன நிதியில் 11 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மழைநீர்வடிகால்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளால் சென்ற 2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது பெரும் பாதிப்பை சந்தித்த தியாகராய நகர், அசோக் நகர், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், புளியந்தோப்பு போன்ற பல பகுதிகளில் தற்போது பாதிப்பு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

**மழைநீர் வடிகால்வாய் பணிகள்!**

சென்னையின் வட பகுதியில் உள்ள கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் 769 கி.மீ நீளத்திற்கு, ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 68 விழுக்காட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூரில் வாழும் மக்கள் பயனடைவார்கள்.

❖ கோவளம் வடிநிலப்பகுதியில் 360 கி.மீ. நீளத்திற்கு. ரூ.1714 கோடி மதிப்பீட்டில் KfW வங்கி நிதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், நங்கநல்லூர், கண்ணன் காலனி, மயிலை பாலாஜி நகர், புவனேஸ்வரி நகர், புழுதிவாக்கம், கண்ணகி நகர், எம்.சி.என். நகர் மற்றும் துரைப்பாக்கம் பகுதிகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். மீதமுள்ள பணிகள் நிறைவேற்றப்படும் போது, இந்திரா நகர், நீலாங்கரை, வெட்டுவான்கேணி, செம்மஞ்சேரி உள்ளிட்ட சென்னையின் தென்பகுதிகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவேறும் போது, சென்னையில் வெள்ளத்தின் தாக்கம் பெருமளவு குறைக்கப்படும் என்று நான் கருதுகிறேன்.

**பள்ளிக்கரணை சதுப்புநிலம்: பயன்பாடு குறித்து மறு ஆய்வு!**

**செய்தியாளர்:** *பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. நீர் வடிந்து தேங்காமல் இருப்பதற்கு இயற்கையால் உருவான அந்த நிலத்தை முழுவதுமாக மீட்டு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுபோல வேளச்சேரியிலும் பல இடங்கள் சதுப்பு நிலமாகவே இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க அரசின் நடவடிக்கை என்னவாக இருக்கப் போகிறது?*

**மு.க.ஸ்டாலின்:** பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை முழுமையாகப் பாதுகாப்பது மிகமிக அவசியமானதாகும். தென்சென்னை பகுதிகளில் ஏற்படும் மழை வெள்ளப் பாதிப்புகளைக் குறைப்பதில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளின் பயன்பாடு குறித்து நிச்சயமாக மறு ஆய்வு செய்யப்படும். இந்த சதுப்பு நிலத்தைப் பாதுகாக்கவும், விரிவுபடுத்தவும், வனத்துறை ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோல், சென்னை பெருநகரத்திற்கான மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த முழுமைத் திட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான திட்டங்கள் உறுதி செய்யப்பட்டு, ஓராண்டு காலத்திற்குள் அது வெளியிடப்படும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும்!

## சில சக்திகளின் கைப்பாவையாகச் செயல்படுவதைத் தவிர்த்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆளுநர் உறுதுணையாக இருக்க வேண்டும்!

# பேரிடரில் மீண்டோம்... சேலத்தில் சந்திப்போம்!

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கர்ப்பிணிப் பெண்கள், அவசர சிகிச்சை வேண்டியோர், மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர். இவர்கள் உள்பட 4 ஆயிரத்து 266 கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களை மீட்டும் அவர்களுக்குத் தேவையான உதவிகளும் செய்யப் பட்டுள்ளன. மொத்த கோரிக்கைகளில் 74.9% அளவிற்கு நிறை வேற்றப்பட் டுள்ளன.

இதுபோலவே கழகத்தின் ஒவ்வொரு அணி சார்பிலும் உதவிக்கரம் நீண்ட காரணத்தால், சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் விரைந்து இயல்பு நிலை திரும்பியது. விமர்சனம் செய்வதற்கும் வீண்பழி சுமத்துவதற்கும் எதிர்க்கட்சிகள் முனைப்பு காட்டினாலும், மக்களின் துயர் துடைக்க அவர்கள் முன்வரவில்லை. எதிர்க்கட்சியாக இருந்தபோதும் திராவிட முன்னேற்றக் கழகம் 2015 வெள்ள பாதிப்பிலும், கொரோனா பேரிடரில் ஒன்றிணைவோம் வா என்ற பெயரிலும் மக்களின் துயரைத் துடைத்தது. ஆளுங்கட்சியாக இருக்கும்போதும் தி.மு.கழகத்தினர்தான் மிக்ஜாம் கனமழை வெள்ள பாதிப்பில் மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு சில இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. மக்களின் கோரிக்கைகள் உடனடியாக செவி மடுக்கப்படாதது போன்ற தகவல்களையும் கவனித்து, அங்கும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்தது உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஆட்சியை வழங்கிய மக்களிடம் பொறுப்புடன் நடந்துகொள்ளும் தன்மை கொண்டது இந்த அரசு. **டி.வியில் பார்த்துதான் விவரம் தெரிந்துகொண்டேன் என்றோ, பங்களா வீட்டின் வாசலில் உள்ள பெரிய இரும்புக் கதவு திறக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்றோ முந்தைய ஆட்சியாளர்களின் நிலைமை இன்றில்லை. மக்கள் பிரதிநிதிகளை மக்கள் அணுகமுடியும், கேள்வி கேட்க முடியும், நிவாரணம் பெற முடியும் என்ற ஜனநாயகப்பூர்வமான அரசு செயல்பட்டு வருகிறது.**

**தமிழ்நாட்டு மக்களுக்கும், பிற மாநில மக்களுக்கும் உரிமைகள் கிடைத்திட 2024 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்களமாக நிச்சயம் அமைந்திடும். அந்தக் களத்தை நோக்கி நம்மை ஆயத்தப்படுத்திட, சேலத்தில் தம்பி உதயநிதி தலைமையில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் டிசம்பர் 24 அன்று நடைபெறுகிறது.**

**பேரிடரிலிருந்து மீண்ட மக்களின் மகிழ்வான மனநிலை தொடர்ந்திட கண்டு, நம்முடைய பொறுப்புகளை உணர்ந்து, சேலத்தில் சந்திப்போம்! களம் எதுவாயிலும் கலங்காது நிற்போம்! இளைஞரணி மாநாடு வெல்லட்டும்! அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளமாகட்டும்!**

**மிக்ஜாம் புயலின் பாதிப்புகளைப் பார்வையிட வந்த ஒன்றிய குழுவினரும், அரசியல் மாச்சரியமின்றி திராவிட மாடல் அரசின் பணிகளைப் பாராட்டியிருப்பது நம் உண்மையான உழைப்புக்கும் அக்கறையான செயல்பாடுகளுக்குமான சான்றிதழ் மட்டுமல்ல, அவதூறு பேசி அரசியல் செய்ய நினைப்பவர்களின் கன்னத்தில் விழுந்த பளார் அறை என்றால் மிகையல்ல.**

பேரிடரிலும் அரசியல் செய்யும் குணம் படைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலன் காக்க சிந்தித்து செயல்படும் அரசு, 6000 ரூபாய் நிவாரணம் அறிவித்து, அதற்கானப் பணிகளை முன்னெடுத்துள்ளது. பேரிடரில் உயிர் இழந்தவர்களுக்கான நிவாரணம், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்திலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

**திராவிட மாடல் அரசின் பணிகளை பிற மாநிலங்கள் கவனிக்கின்றன. திராவிட மாடல் அரசின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்றன. இந்தியாவுக்கு வழிகாட்டும் வகையில் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் தொடரும் நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கையான பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் முன்னிறுத்திய மாநில உரிமைகள் காக்கப்படவேண்டும். முந்தைய அடிமை ஆட்சியாளர்களால் பறிபோன மாநில உரிமைகளை மீட்டாக வேண்டும்.** தமிழ்நாட்டு மக்களுக்கும், பிற மாநில மக்களுக்கும் உரிமைகள் கிடைத்திட 2024 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்களமாக நிச்சயம் அமைந்திடும். அந்தக் களத்தை நோக்கி நம்மை ஆயத்தப்படுத்திட, சேலத்தில் தம்பி உதயநிதி தலைமையில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் டிசம்பர் 24 அன்று நடைபெறுகிறது.

பேரிடரிலிருந்து மீண்ட மக்களின் மகிழ்வான மனநிலை தொடர்ந்திட கண்டு, நம்முடைய பொறுப்புகளை உணர்ந்து, சேலத்தில் சந்திப்போம்! களம் எதுவாயிலும் கலங்காது நிற்போம்! இளைஞரணி மாநாடு வெல்லட்டும்! அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளமாகட்டும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054
கார்த்திகை 30
16-12-2023



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2023) மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா, பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.அப்துல் சமது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கழக இலக்கிய அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கலைராஜன், தனது இரண்டு மாத சட்டமன்ற உறுப்பினர் ஓய்வூதியத் தொகையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

### சேலத்தில் நடைபெறும் தி.மு.க. 2வது இளைஞரணி மாநாட்டில்

# 35 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள்!

### திருச்சியில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

*திருச்சி, டிச. 17-*

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையில் நேற்று நடைபெற்றது.

பின்னர் சிறப்புரை யாற்றிய அமைச்சர் கே என் நேரு..

திருச்சியின் மாவட்ட செயலாளராக நான் இருந்த போது மாவட்டத்தின் தி.மு.க. தொண்டர்கள் சிறப்பாக பணியாற்றினர். அந்த உழைப்பு தான் என்னை கட்சியின் தலைமைக்கு வாருங்கள் என அழைக்க வைத்தது.

முதன்மை செயலாளர் என்கிற பொறுப்பு ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் வகித்த பொறுப்பு. அந்த பொறுப்புக்கு என்னை தேர்ந்தெடுத்ததுக்கு காரணம் திருச்சி மாவட்ட தி.மு.க. தொண்டர்கள் தான். அவர்கள் தந்த ஆதரவு, அன்பு, ஒத்துழைப்பு அதனால் கிடைத்த வெற்றி காரணமாக தான் இந்த பரிசு எனக்கு கிடைத்தது. இது உங்களுக்கு கிடைத்த பரிசு,தலைவர் எதை கூறினாலும் அதை செய்து முடிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தோடு நாம் செயல்பட்டு வருகிறோம்.

எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தில் திருச்சியில் ஒரு தொகுதியில் மட்டும் தான் தி.மு.க வெற்றி பெற்றது. ஆனால் இன்று அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளோம் அதற்கு காரணம் தொண்டர்களின் உழைப்பு தான்.

தொண்டர்கள் யாரிடமும் நாங்கள் பாகுபாடு காட்ட மாட்டோம்.

திருச்சியில் தி.மு.க நடத்திய மாநாடுகளுக்கு பின் நடந்த தேர்தல்களில் ஒரு தேர்தலை தவிர அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளோம்.

சேலத்தில் நடைபெறும் தி.மு.க இளைஞரணி மாநாடு மிகப்பெரிய மாநாடாக அமையும் அந்த மாநாட்டை நாம் வெற்றி பெற செய்ய வேண்டும் என்றார்.

இந்த செயல் வீரர்கள் கூட்டத்தில் திருச்சி தி.மு.க மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன், மாநகர செயலாளரும் மாநகர மேயருமான அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், பழனியாண்டி, ஸ்டாலின் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, டோல்கேட் சுப்பிரமணி, முத்துச்செல்வம், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மராஜேந்திரன், சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆனந்த், மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள், முத்துச்செல்வம், விஜயா ஜெயராஜ், கருணாநிதி, மயில்வாகணன், சிவந்தலிங்கம், கண்ணன், ராம்குமார், போட்டோ கமால், மோகன் தாஸ், நாகராஜ், இளங்கோ, கனகராஜ், கிராப்பட்டி செல்வம், அந்தநல்லூர் கதிர்வேல், அண்ணாதுரை, தொ.மு.ச. குணசேகர், அறங்காவல் குழு தலைவர் முரளி, வழக்கறிஞர்கள் கவியரசன், மணிபாரதி, அந்தோணி, கே.எம். சேகரன், வீரன், பி.ஆர்.சிங்காரம், செய்து அடைக்கலம், புத்தூர் தர்மராஜ், விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி, கலைச்செல்வி, கவிதா, ராமதாஸ், புஷ்பராஜ், பவுல்ராஜ், முகுந்தன் டாக்டர் தமிழ்நாடு சி.சுப்பையா, பி.ஆர்.பாலசுப்பிரமணியன், பந்தல் ராமு விவேல் அஹமத், கருத்து கதிரேசன், உத்தமர் சி.லி.ராஜேந்திரன் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக சேலத்தில் நடைபெறும் இரண்டாவது இளைஞரணி மாநாட்டில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டத்தில் இருந்து சுமார் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சி.ஐ.டி. நகர் காட்டுகோவில் பகுதியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் மேற்பார்வையில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் முன்னிலையில் மாபெரும் மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

### அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து மாபெரும் வெற்றி பெறுவோம்!

# 2024 தேர்தல்: மோடி அரசை வீழ்த்துவதற்கான ஒரு பெரும் யுத்தம்!

### மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி பேச்சு!

*சென்னை, டிச.17-*

2024 நாடாளுமன்றத் தேர்தல் மோடி அரசை வீழ்த்துவதற்கான ஒரு பெரும் யுத்தம் என்றும், அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து மாபெரும் வெற்றி பெறுவோம் என்றும் சீத்தாராம் யெச்சூரி அழைப்பு விடுத்தார்.

இந்திய கம்யூனிச இயக்கத்தின் முன்னோடி தோழர் பி.ராமமூர்த்தி நினைவு சொற்பொழிவு டிசம்பர் 14 வியா ழனன்று மாலை சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, ‘கார்ப்பரேட் மதவாதக் கூட்டணி இந்திய அரசியலமைப்புச் சட்ட ஜனநாயகம் சீர் குலைப்பு’ என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் பகுதிகள் வருமாறு:

ஆர்.எஸ்.எஸ்., இந்துத்துவா சக்திகள் தங்களது கண்ணோட்டத்தில் வெற்றியடைய 3 அம்சங்கள் தேவைப்படுகிறது. மத்திய தர வர்க்கத்தின் ஆதரவு, ஏகாதிபத்தியத்தின் ஆதரவு, தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு ஆகிய மூன்றும் தேவை. இப்படித்தான் கார்ப்பரேட் வகுப்புவாத கூட்டணி உருவாகிறது.

உலகம் முழுக்க நடைபெறும் அநியாயங்களில், மனித உரிமை மீறல்களில் அமெரிக்காதான் தலையிட்டு நீதியை நிலைநாட்டுவது போன்ற போலியான தோற்றத்தை உருவாக்கி வருகிறார்கள். இந்தியாவில் சிறுபான்மை மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டபோது அமெரிக்க ஏகாதிபத்தியம் எதுவுமே பேசாமல் இருந்தது.

மதச்சார்பின்மை, ஜனநாயகம் எனும் விழுமியங்களை சீர்குலைக்க வேண்டுமென்றால், மாநிலங்களுக்கு அதிகாரம் தரக்கூடிய கூட்டாட்சியை ஒழிக்க வேண்டும். அதை நோக்கி பா.ஜ.க. செல்கிறது.

மாநிலங்கள் உரிமைகள் பறிக்கப்படுவது பல்வேறு வடிவங்களில் நிகழ்கிறது. வரி வருவாய் பகிர்வு, நிதிப்பகிர்வு கொடுக்காமல் தத்தளிக்க வைக்கின்றனர். அரசியல் சாசன அடிப்படையில் உருவாக்கப்பட்ட அமைப்புகளை கட்டுப்படுத்துகின்றனர்.

ஜம்முகாஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம் குறித்த வழக்கில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு பலவிதங்களில் விமர்சனத்திற்குரியதாக உள்ளது. இந்த தீர்ப்பின் வாயிலாக மாநில உரிமைகள் முழுமையாக பறிக்கப்படுகிறது. இந்த தீர்ப்பின்படி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தால், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்து, எந்த ஒரு மாநிலத்தையும் துண்டு துண்டாக பிரிக்கக்கூடிய நடவடிக்கைக்கு வழிவகை செய்கிறது. தமிழகம் கூட 3 யூனியன் பிரதேசமாக பிரிக்கப்படலாம்.

நீதித்துறை, தேர்தல் ஆணையம், அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, மத்திய புலனாய்வு துறை போன்றவற்றை ஆளும் அரசாங்கத்தின் கருவியாக தவறாக பயன்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் சாசனத்தின் அடிப்படையாக உள்ள மதச்சார்பற்ற ஜனநாயகம், பொருளாதார இறையாண்மை, சமூக நீதி, கூட்டாட்சி கோட்பாடு ஆகிய நான்கையும் அழித்தொழிப்பதற்கான பாதையில் செல்கிறார்கள்.

மக்கள் மீது கட்டுப்பாட்டை கொண்டு வர வேண்டும் என்றால், வரலாற்றை திருத்த வேண்டும்; பாடத்திட்டத்தை மாற்ற வேண்டும்; சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை கட்டமைக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்து, இந்துத்துவா செல் வாக்கில் அனைவரையும் உள்ளடக்க வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. இந்த எண்ணத்தோடு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தேவையென்றால், மக்களை சிந்திக்க விடாமல் செய்ய வேண்டும். எனவே, சுதந்திரமான சிந்தனைக்கு வழிவகுக்கும் உயர் கல்வி நிறுவனங்கள் மீது கட்டுப்பாட்டை கொண்டு வருகின்றனர். சிந்திக்கக் கூடாது, கேள்வி கேட்கக் கூடாது, மோடி சொல்வதை கேட்க வேண்டும் என்ற கண்மூடித்



தனமான நம்பிக்கையை கட்டமைக்கிற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர்.

இதன்காரணமாகத்தான், புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறந்தபோது குடியரசுத் தலைவரை அழைக்க மறுத்தார்கள். ஒன்றிய அரசுக்கு எதிரான பல தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் அளித்துள்ளது. அரசியலமைப்பு சாசனத்தின் மாண்புகளை நிலைநிறுத்தும் தீர்ப்புகளை உதாசீனம் செய்கின்றனர். தீர்ப்புக்கு மாறாக, நாடாளுமன்றத்தில் சட்டங்களை கொண்டு வருகின்றனர். உச்சநீதிமன்றமாக இருந்தாலும், ஒப்புக்கொள்ளும்படி இல்லையென்றால், பெரும்பான்மையை வைத்து நாடாளுமன்றத்தில் மாற்றுவோம் என்ற அகங்காரம் பிரதிபலிக்கிறது. அனைத்தும் பிரதமர் என்ற ஒற்றை தலைவர்தான் செய்வார் என்கிற தோற்றத்தை திட்டமிட்டு கட்டமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்போது தான், இந்து ராஷ்டிரம் உருவாக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

#### ஒற்றைத் தலைவர் என்ற பிம்பம்

அரசியல் கட்டமைப்பை அவர்களுக்கு சாதகமாக மாற்றுகிற ஒரு அரசியல் திட்டம் அவர்களிடம் உள்ளது. பண மதிப்பிழப்பு, டிஜிட்டல் பண பரிவர்த்தனை, மாட்டிறைச்சி உண்ணலாமா கூடாதா, என்ன உடை உடுத்த வேண்டும், எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும் என்பதையெல்லாம் அவர் ஒருவர்தான் தீர்மானிப்பார். இப்படி ஒரு பிம்பத்தை கட்டமைத்து, மக்களின் சிந்தனைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

ஐந்து மாநில தேர்தல் முடிவுகளில் கூட, இந்துத்துவ செல்வாக்கு தீவிரப்பட்டுள்ளதை பார்க்க முடிகிறது. இதையெல்லாம் தங்குதடையின்றி செய்ய முடிகிறதென்றால், அதற்கு காரணம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பது தான். அவர்களது நிகழ்ச்சி நிரலை தடுக்க, அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டுமென்றால், ஆட்சி அதிகாரத்திலிருந்து அவர்களை அகற்ற வேண்டும். நாடாளுமன்ற தேர்தல் வடிவில் பெரும் போராட்டம் நடத்த வேண்டி உள்ளது.

#### பா.ஜ.க. வெற்றி பெறாது

ஐந்து மாநில சட்டமன்ற தேர்தலில் 3 மாநிலங்களில் பா.ஜ.க. குறிப்பிடத் தகுந்த வெற்றி பெற்றிருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலிலும் இந்த போக்கு தானே தொடரும் என்று ஐயம் பலருக்கு உள்ளது. 2003ஆம் ஆண்டு பா.ஜ.க. தலைமையிலான என்டிஏ அணி 4 மாநில சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றனர். எனவே, அப்போதைய பாஜக பிரதமர், நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்தினார். ஆனால், பா.ஜ.க. தோற்று மன்மோகன் சிங் பிரதமரானார். 2018ல் நடைபெற்ற 3 மாநில சட்டமன்ற தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தோற்றது. மோடி பிரதமரானார். 2023ம் ஆண்டு 3 மாநில சட்டமன்ற தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. இது தான் போக்கு என்றால், 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெறாது. இதை சாத்தியமாக்க அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும். அரசியல் சாசனத்தை, இந்தியாவை பாதுகாக்க போராட வேண்டும். இந்தியா என்கிற அதன் தன்மையை பாதுகாக்கிற போராட்டமாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். யெச்சூரி உரையை மத்தியக்குழு உறுப்பினர் உ. வாசுகி மொழியாக்கம் செய்தார்.

# புயல் மழை: அரசின் பணிகளில் சுணக்கம் இல்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி ... 2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த மூன்றாவது முழுமைத் திட்டத்தில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் சென்னையில் உள்ள நீர்நிலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள பாதிப்புகளைக் குறைப்பதற்கான அம்சங்கள் இடம்பெறும். சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளையும், சதுப்பு நிலங்களையும் மேம்படுத்தி, வெள்ள பாதிப்புகளைக் குறைத்து, ஒரு நிலைக்கத்தக்க திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்வதற்கு இந்த மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) நிச்சயம் வழிவகுக்கும்.

**ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் அரசு முனைப்புடன் உள்ளது!**

**செய்தியாளர்:** *சென்னை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் நீர்நிலைகளும் தண்ணீர் வடியும் பாதைகளும் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருக்கின்றன. கனமழை பெய்யும்போது எல்லா ஊர்களிலுமே இது போன்ற நிலைமை ஏற்படுகிறது. ஆக்கிரமிப்புகளைச் சுணக்கம் காட்டாமல் அகற்ற அரசு முன் வருமா?*

**மு.க.ஸ்டாலின்:** ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் அரசு எப்போதும் முனைப்புடன் உள்ளது. எவ்வித ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அவை அகற்றப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு ஆகும். நீர்நிலைகளையும், வெள்ளச் சமவெளிகளையும் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளில் இருந்து காக்க வேண்டும். அத்தகைய நீர்நிலைகளைச் சுத்தம் செய்து அகலப்படுத்த வேண்டும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நவம்பர் 2021 முதல் நவம்பர் 2023 வரை நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள 350 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, 475.85 ஹெக்டேர் பரப்பளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. அதேபோன்று, நீர்வள ஆதாரத் துறைக்குச் சொந்தமான ஏரிகள், குளங்கள், ஆறுகள் உள்ளிட்ட பகுதிகளில் 19,876 ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, 220.45 ஹெக்டேர் பரப்பளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

**செய்தியாளர்:** *நீர்ப்பிடிப்பு மிக்க நெல்வயல்கள் குடியிருப்புகளாக மாறுவது ஒரு முக்கிய மான பிரச்சினையாக மாறுகிறது. அவற்றை தடுக்கவோ, வரைமுறைப்படுத்தவோ அரசு ஏதாவது செய்ய முடியுமா?*

**மு.க.ஸ்டாலின்:** நான் ஏற்கெனவே கூறியது போல் மூன்றாவது முழுமைத் திட்டத்தை (Third Master Plan) வடிவமைக்கும்போது, இது தொடர்பான அம்சங்களும் கருத்தில் கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**செய்தியாளர்:** *ஒவ்வொரு முறையும் புயல் வரும்போதும் அரசு தீவிரமாக செயல்படுகிறது. அதற்குப் பின்னால் ஒரு சுணக்கம் ஏற்பட்டு விடுகிறது. ஆண்டு முழுவதும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுச் செயல்பட முடியாதா?*

**மு.க.ஸ்டாலின்:** அரசின் பணிகளில் சுணக்கம் இல்லை. கழக ஆட்சி ஆறாவது முறையாக வந்தபிறகு நாங்கள் செய்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்ப் பணிகளைப் பாருங்கள். அதனால்தான் பெரிய அளவு பாதிப்பு தவிர்க்கப்பட்டது. மீதமுள்ள பணிகளையும் விரைவில் முடித்துவிடுவோம்.

அடுத்தகட்டமாக பல புதிய பணிகளைத் தொடங்க இருக்கிறோம். எனவே, இது முடிவுற்று விடும் பணியல்ல, தொடர்ச்சியான பணி என்பதை நாங்கள் தொடர்ந்து அறிந்துள்ளோம். மக்கள் தொகை பெருகப் பெருக, நகரம் விரிவடைய விரிவடைய எங்களது திட்டமிடு தல்களும் விரிவடையும் என உறுதி அளிக்கிறேன்.

**சென்னை பெருநகரத்திற்கான மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த முழுமைத் திட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான திட்டங்கள் உறுதி செய்யப்பட்டு, ஓராண்டு காலத்திற்குள் அது வெளியிடப்படும். இந்த மூன்றாவது முழுமைத் திட்டத்தில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் சென்னையில் உள்ள நீர்நிலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள பாதிப்புகளைக் குறைப்பதற்கான அம்சங்கள் இடம்பெறும். சென்னையையும், அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளையும், சதுப்பு நிலங்களையும் மேம்படுத்தி, வெள்ள பாதிப்புகளைக் குறைத்து, ஒரு நிலைக்கத்தக்க திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்வதற்கு இந்த மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) நிச்சயம் வழிவகுக்கும்.**

**ஆளுநர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்!**

**செய்தியாளர்:** *முதல்வராகிய நீங்களும் ஆளுநரும் கலந்து பேசி, நிர்வாகத்தில் இருக்கும் முட்டுக்கட்டைகளைப் போக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. ஆளுநர் உங்களை அழைத்திருக்கிறார். அரசு நிர்வாகத்தில் இருக்கும் சிக்கல்களை இது களையும் என்று நம்புகிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபிறகு பல முறை அவரை நான் சந்தித்து இருக்கிறேன். பேசி இருக்கிறேன். அரசு விழாக்களிலும் பல முறை இருவரும் பங்கெடுத்து இருக்கிறோம். அப்போதெல்லாம் என்னிடம் இனிமையாகத்தான் பழகினார் - பேசினார். எனவே, நாங்கள் இருவரும் சந்திப்பது அல்ல பிரச்சினை. ஆளுநர் மனம் மாறித் தமிழ்நாட்டின் நன்மைக்காகச் செயல்பட வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. தமிழ்நாட்டு மக்களுக்கும், சிந்தனைக்கும், வளர்ச்சிக்கும் எதிரான சில சக்திகளின் கைப்பாவையாக அவர் செயல்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள்.

**மூன்று மாநில தேர்தல் முடிவை படிப்பினையாக பார்க்கிறோம்!**

**செய்தியாளர்:** *மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் பாரதீய ஜனதாக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதைத் தடுக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியுள்ளது. இச்சூழலில் இந்தியா கூட்டணியின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நம்புகிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் என்பவை சட்டமன்றத் தேர்தல் முடிவு கள்தான். இது நாடாளுமன்றத் தேர்தல் முடிவைப் பாதிக்காது. பொதுவாகச் சட்டமன்றத் தேர்தலின் போது மாநிலப் பிரச்சினைகள்தான் தலைதூக்கிக் காணப்படும். அவைதான் இத்தகைய முடிவுக்குக் காரணம் ஆகும்.

இராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க.வென்றிருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.க. வுக்குமான வாக்கு வித்தியாசம் 10 லட்சம் போர்தான். சத்தீஸ்கரில் 6 லட்சம் வாக்கு கள்தான் பா.ஜ.க அதிகம் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசத்தில் மட்டும்தான் 35 லட்சம் வாக்குகளைக் கூடுதலாக பா.ஜ.க. பெற்றுள்ளது.

பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் சிதறாமல், ஒருமுகப்பட்டிருக்குமானால் இந்த மூன்று மாநில வெற்றியை பா.ஜ.க. பெற்றிருக்க முடியாது என்பதே உண்மை. நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வுக்கு எதிரான வாக்குகளை அனைத்து மாநிலங்களிலும் ஒன்று சேர்க்கும் முயற்சி களை 'இந்தியா' கூட்டணி செய்யும். அதன் மூலமாக நாடாளுமன்றத் தேர்தலில் முழுமையான வெற்றியை நாங்கள் பெறுவோம். மூன்று மாநிலத் தேர்தல் முடிவைப் படிப்பினையாகவே நாங்கள் பார்க்கிறோம்.

**வெள்ளத் தடுப்பு நடவடிக்கை விவரங்கள்: பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடுவோம்!**

**செய்தியாளர்:** *திருப்புகழ் கமிட்டி அறிக்கையின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அறிக்கை வெளியிட வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைக்கின்ற னவே?*

**மு.க.ஸ்டாலின்:** முதலில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அறிக்கை விடும் எதிர்க்கட்சிகள் பேரிடர் களத்திலும் இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளிலும் ஈடுபடவில்லை.

திருப்புகழ் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது. இன்னும் செயல்படுத்தவுள்ளது. திருப்புகழ் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அத்திட்டங்களின் தற்போதைய நிலை ஆகியவற்றைத் தொகுத்து விரைவில் எங்கள் அரசு பொதுவெளியில் வெளியிடும். என்னைப் பொறுத்தவரை, இந்த அரசு ஒரு நேர்மை யான, வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற வகையில் செயல்படும் அரசு. இந்த இரண்டரை ஆண்டுகளில், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் எடுக்கப்பட்ட வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள், அதற்கான செலவினம் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும், நாங்கள் வெகுவிரைவில் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2023) திரைப்பட இயக்குநரும், நடிகருமான அமீர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

### தொழிலகப் பாதுகாப்புத்துறை –

## தொழிலாளர் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள்!

### அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

*சென்னை, டிச. 17 - தொழிலாளர் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன.*

*தொழிலாளர் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் பணியில் இருந்த போது இறந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு விதிகளின் படி அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.*

*தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் 15.12.2023 அன்று 6 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் முறையே 5 நபர்களுக்கு இளநிலை உதவியாளர்களாகவும், 1 நபருக்கு பதிவுறு எழுத்தராகவும் (1.செல்வி. பா. சோபிகா 2. திருமதி. ஆர். கலாமணி, 3. க. விஜய், 4. ச.இசக்கிமுத்து, 5. ஆ.நாகராஜா, 6. லா.டேவிட்) பணி நியமன ஆணை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் துறை ஆணையர் அதுல் ஆனந்த், கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி. சி.ஹேமலதா, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக்குழு மற்றும் பொது) தே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

### கலைஞர் நகர் - 138-வது வார்டில் - கே.கண்ணன் எம்.சி. ஏற்பாட்டில்

## 2000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

### ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. - எஸ்.குணசேகரன் - முன்னணியினர் பங்கேற்பு!

*சென்னை, டிச.17- பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எஸ்.எம்.பிளாக், ஆற்றோர பகுதி தெருக்கள், தங்கவேல் நகர் பகுதியில் 2000 குடும்பங்களுக்கு பகுதி செயலாளர், 138வது வார்டு கவுன்சிலர் கே.கண்ணன் ஏற்பாடு செய்த அரிசி, பெட்சீட், ரஸ்க் பாக்கெட்டுகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், விருகம்பாக்கம் எம்.எல்.ஏ. ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா முன்னிலையில் வழங்கினார்.*

*உடன் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், துணை செயலாளர் வாசுகி பாண்டியன், அஜந்தா ரவி, வட்ட செயலாளர்கள் மு. அன்பழகன், சோ.செ ந்தில் குமார், சதீஷ்கண்ணன், ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், பாரி நகர் சசி, பச்சையப்பன், சபரி, பூமி, சுதா, மேகநாதன், கார்த்திக், ஆனந்த், கமலக்கண்ணன், பாபு, ரமேஷ், ஏழுமலை, குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

### குற்றவாளிகளுக்கு பாஸ் கொடுத்த பா.ஜ.க. எம்.பி. அவைக்கு உள்ளே! நாட்டின் பாதுகாப்பு குறித்து


## கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவைக்கு வெளியே - இதுதான் ஜனநாயகமா?

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, டிச. 17- குற்றவாளிகளுக்கு பாஸ் கொடுத்த பா.ஜ.க. எம்.பி. அவைக்கு உள்ளே, நாட்டின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவைக்கு வெளியே -இதுதான் ஜனநாயகமா? என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து 16.12.2023 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-*

*ஜனநாயகத்தின் இதயமாக கருதப்படும், நாடாளுமன்ற அவைக்குள் அத்துமீறி நுழைந்து, கலர் குண்டுகளை இருவர் வீசிய சம்பவம் நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இது குறித்து பிரதமர் விளக்கம் அளிக்க வேண்டும் என வலியுறுத்திய எம்.பி.க்கள் அதிரடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டது இன்னொரு பேரதிர்ச்சியை கொடுத்திருக்கிறது.*



தினகரன்

டிசம்பர் 16, 2023 சனிக்கிழமை

எங்கே ஜனநாயகம்..?

ஜனநாயகத்தின் இதயமாக கருதப்படும், நாடாளுமன்ற அவைக்குள் அத்துமீறி நுழைந்து, கலர் குண்டுகளை இருவர் வீசிய சம்பவம் நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இது குறித்து பிரதமர் விளக்கம் அளிக்கவேண்டும் என வலியுறுத்திய எம்.பி.க்கள் அதிரடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டது இன்னொரு பேரதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. பார்வையாளர்கள் மாடத்தில் இருந்து எம்.பி.க்கள் இருக்கும் அவைக்குள் தாவி குதித்து, கலர் குண்டுகளை வீசியது, நிச்சயம் பாதுகாப்பு குறைபாடுதான். இது குறித்து எதிர்க்கட்சியினர் ஆளும் அரசிடம் கேள்வி கேட்பது, ஜனநாயக கடமை.

*நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு முழுப்பொறுப்பு ஏற்கவேண்டியது உள்துறை அமைச்சர் அமித்ஷா. ஆனால், அவர் இது குறித்து வாய் திறக்கவே இல்லை. எனவேதான், இச்சம்பவத்துக்கு பொறுப்பேற்று அமித்ஷா பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடந்த 14ம் தேதி அமளியில் ஈடுபட்டனர்.*

*இதற்காக, திமுக எம்.பி. கனிமொழி, காங்கிரஸ் எம்.பி.க்கள் மாணிக்கம் தாகூர், ஜோதிமணி, டி.என்.பிரதாபன், ஹைபி ஈடன், ரம்யா ஹரிதாஸ், டீன் குரிய கோஸ், வி.கே.கண்டன், பென்னி பெஹனான், முகமது ஜாவேத், மார்க்சிஸ்ட் கம்யூ. எம்.பி.க்கள் பி.ஆர். நடராஜன், சு.வெங்கடேசன், இந்திய கம்யூ. எம்.பி சுப்பராயன் ஆகியோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.*

*நாடாளுமன்ற பாதுகாப்பு குறித்து இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என ஜனநாயக முறையில் கோரிக்கை விடுத்த திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.யான டெரிக் ஓப்ரெய்னும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். இதில், பெரிய வேடிக்கை என்னவென்றால், அன்றையதினம் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாத திமுக எம்.பி.யான எஸ்.ஆர்.பார்த்திபனும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.*

*கடந்த காலங்களில், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபடும்போது, பேச்சுவார்த்தை நடத்தி, அவை சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்வது வழக்கம். அத்தகைய முயற்சிகள் எதையும் தற்போது எடுக்காமல், எதிர்க்கட்சி எம்.பி.க்களை அதிரடியாக சஸ்பெண்ட் செய்துள்ளது ஏன்...? குற்றவாளிகளுக்கு பாஸ் கொடுத்த பாஜ எம்பி - அவைக்கு உள்ளே..! நாட்டின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய எதிர்கட்சி எம்.பி.க்கள் - அவைக்கு வெளியே..! இதுதான் ஜனநாயகமா? எதற்கும் ஒரு எல்லை உண்டு.*

*துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஜனநாயகம் - வெறும் ஏமாற்று வேலையாக உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தங்கள் கடமைகளையும், பொறுப்புகளையும் செய்யவிடாமல் தடுப்பது, ஜனநாயக ஆணிவேரை அசைத்து பார்க்கும் முயற்சி ஆகும். எனவே, ஒன்றிய அரசு தனது பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது நல்லது.*

*இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட நிர்வாகம்,மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் தனியார் வேலைவாய்ப்பு முகாமினை மானாமதுரை பள்ளியில் தொடங்கி வைத்து இதில் தேர்வு பெற்றவர்களுக்கு வேலைக்கான ஆணைகளை முன்னாள் அமைச்சர், ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அலுவலர்கள் மோகனசந்திரன், வானதி, கணேஷ்மூர்த்தி, ராஜலட்சுமி, ராஜா, ஒன்றிய பெருந்தலைவர் லதா, நகர்மன்ற தலைவர் மாயப்பன் கென்னடி, ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, தலைவர் முத்துசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன், நகர் கழக செயலாளர் பொன்னுசாமி, மயில்வாகனன், திருமுருகன், வளர்மதி, அழகேசன், சிவனேசன், கண்ணன், மன்னர் மன்னன், தேசிங்குராஜா, அரசு துறை அலுவலர்கள், கலந்து கொண்டனர்.


நாள்: 17.12.2023 காலை 10 மணி
இடம்: டி யுசி எஸ் நியாயவிலை கடை,
100 அடி (பைபாஸ்) சாலை,
அஷ்டலட்சுமி நகர்,
வேளச்சேரி.
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
Santhosh Design
99401 80492
'மிக்ஜாம்' புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு
அரசின் சார்பில் நிவாரணத் தொகை வழங்கும்
பணியினை தொடங்கி வைத்திட வருகை தரும்
தமிழ்நாட்டின் முதலமைச்சர்
மாண்புமிகு மு.க.ஸ்டாலின்
அவர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
மா.சுப்பிரமணியன் B.A,LLB.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்



நாள்: 17.12.2023
காலை 10.00 மணி
அஷ்டலட்சுமி நகர், வேளச்சேரி
மிக்ஜாம் புயல் வெள்ளத்தால்
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
ரூ.6000/- வழங்கிடும் திட்டத்தை
துவக்கி வைத்திட வருகைதரும்
தமிழ்நாடு முதல்வர் அவர்களே
வருக... வருக... வருக...
மாண்புமிகு.
மா.சுப்பிரமணியன் B.A.,LLB.,
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
9444129952
சைதை கிழக்கு பகுதி தி.மு.க
சென்னை தெற்கு மாவட்டம்
இரா.துரைராஜ்
13வது மண்டல குழு தலைவர் / சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர்




நாள்: 17.12.2023
காலை 10.00 மணி
அஷ்டலட்சுமி நகர், வேளச்சேரி
மிக்ஜாம் புயல் வெள்ளத்தால்
பாதிக்கப்பட்ட மக்களுக்கு
ரூ.6000/- வழங்கிடும் திட்டத்தை
துவக்கி வைத்திட வருகைதரும்
தமிழ்நாடு முதல்வர்
அவர்களே வருக வருக வருக
மாண்புமிகு.
மா.சுப்பிரமணியன் B.A.,LLB.,
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
அரிமா சு.சேகர் DCE.,
வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர்
எஸ்.முருகவேல்
176வது வட்ட கழக செயலாளர்
வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க
சென்னை தெற்கு மாவட்டம்
9444129952



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16–12–2023) மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கோயில் அர்ச்சகர்கள் 240 பேருக்கும், கிறிஸ்தவ பாதிரியார்கள் 100 பேருக்கும், மசூதி உலமாக்கள் 100 பேருக்கும், ஆக 440 பேருக்கு ஆளுக்கு தலா 5 கிலோ அரிசி, ஒரு போர்வை, ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் ஆகியவற்றை வழங்கினார். நிகழ்வில் பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி இரா.துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சைதை மா அன்பரசன், சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! சேலம் இளைஞரணி மாநில மாநாட்டையொட்டி

# பெருங்களத்தூர் தெற்கு - தாம்பரம் கிழக்கு பகுதிகளின் ஆலோசனைக் கூட்டம்!

### தலைமை: எஸ்.சேகர் எம்.சி.! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.- இ.கருணாநிதி எம்.எல்.ஏ.- மேயர் வசந்தகுமாரி பங்கேற்பு!

காஞ்சிபுரம், டிச.17-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி - தாம்பரம் கிழக்கு பகுதி சார்பில் வருகிற 24 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநில மாநாட்டையொட்டி நடைபெறும் ஆலோசனைக் கூட்டம் இன்று (17.12.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் புதுப் பெருங்களத்தூர் சேகர் மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிக் கழக செயலாளரும் மாநகர மாமன்ற தி.மு.க. குழு தலைவருமான பெருங்களத்தூர் எஸ். சேகர், மாடம்பாக்கம் ஆ.நடராஜன் எம்.சி. ஆகியோர் தலைமை வகிக்கிறார்கள்.

பி.புகழேந்தி எம்.சி., இ.எம்.சாம்சன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

பகுதிக் கழக நிர்வாகிகள் வி.ஜெயராமன், வ.க.ரவிசந்திர, டி.ராஜாராம், கே.சாமுண்டீஸ்வரி, எஸ்.விமலா, ஜெ.மணிவண்ணன், ரா.நவீன், மாநகரப் பிரதிநிதிகள் ஜெ.குப்புசாமி, ஆர்.பன்னீர் செல்வம், மு.செந்தில் குமார், ஜெ.செல்வம், டி.ஜெபதுரை, எஸ்.வேலவன், கே.யோபு, பொ. செந்தில்குமார், கே.சுந்தர், எஸ்.சிவக்குமார், எஸ். கமலா சேகர் எம்.சி., எஸ். மதுமிதா மதன் எம்.சி., எஸ்.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., எஸ்.ரமாதேவி செந்தில்குமார் எம்.சி.,

வட்டக் கழக செயலாளர்கள் க.குருநாதன், பி.சுரேஷ், எஸ்.ஐசக், கே.வெங்கடேசன், ஆர். சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன், எம்.கண்ணன் (எ) சாந்தகுமார், எம்.பெருமாள், எம். கே.மோகன ரங்கன், கே. லட்சுமணன், எஸ்.மலைராஜன், ஆர்.ஓம்பிரகாஷ், டி.கே.கோட்டி, வி.நடராஜன், ஆர்.பரஞ்சோதி, எம்.துளசி, ராமன், டிப்பர் ரவி, ஜெ.வேலு, கல்வெட்டு துரை ராஜேஷ், ஜெ.சாது ரொனால்டு, ஏ. குமரன், எஸ்.அருண், டி. பொன்ராஜ், எம்.ராஜா, சி.சோமு பாண்டி, எம். கோவிந்த ராஜ், எம். கோகுல்ராஜ், எஸ்.எம். சோமு கேசவன், ஆர். கோவிந்தராஜன், டி. சுரேஷ், டி.மணிகண்டன், ஆர்.கதிரவன், ஏ.நந்தகுமார், ஜி.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், டி. காமராஜ் எம்.சி., த.ஜெயகுமார், மு.ஆதிமாறன், லயன் எஸ்.சங்கர், பொன். சதாசிவம், இ.விக்கி (எ) விக்னேஸ்வரன், எம்.ராமமூர்த்தி, எஸ்.ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.







## 4 மாவட்டங்களில்

# கழகத்தினர் மேற்கொண்ட நிவாரணப் பணிகள்


கொளத்தூர்


சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி


மாதவரம்


தாம்பரம்


அண்ணா நகர்


சைதாப்பேட்டை


துறைமுகம்


ஆயிரம் விளக்கு


ஆர்.கே நகர்


ஆலந்தூர்


சோழிங்கநல்லூர்


எழும்பூர்


அம்பத்தூர்


காஞ்சிபுரம்


கும்மிடிப்பூண்டி


செங்கல்பட்டு


செய்யூர்

# 4 மாவட்டங்களில் கழகத்தினர் மேற்கொண்ட நிவாரணப் பணிகள்


திரு.வி.க.நகர்


திருத்தணி


தியாகராய நகர்


பல்லாவரம்


மதுரவாயல்



மதுராந்தகம்


விருகம்பாக்கம்


வில்லிவாக்கம்


பூந்தமல்லி


திருப்போரூர்

# 4 மாவட்டங்களில் கழகத்தினர் மேற்கொண்ட நிவாரணப் பணிகள்



வேளச்சேரி



திருவொற்றியூர்



பெரம்பூர்



பொன்னேரி




ஆவடி



இராயபுரம்



திருப்பெரும்புதூர்




மாநில அவசரகால செயல்பாட்டு மையம்



மயிலாப்பூர்



திருவள்ளூர்





தி.மு.க மருத்துவ அணி சார்பில் – பெருமழை வெள்ளம் பாதித்த, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில், 37 சிறப்பு மருத்துவ முகாம்கள் நேற்று (16–12–2023) நடைபெற்றது. சென்னை – இலாயிட்ஸ் காலனியில் உள்ள, அர்பேசர் சுமித் – மண்டலம் 9 அலுவலக வளாகத்தில், தூய்மை பணியாளர்களுக்காக நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி, மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மதன்மோகன், மா.பா.அன்புதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் ஜீவகன் அய்யநாதன், மாவட்ட தலைவர் ரியாஸ், தொகுதி அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



மழை வெள்ளப் பாதிப்புக்குப்பின் பொதுமக்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் களத்தில் நின்று வழங்கி வரும் நிலையில், திருவல்லிக்கேணி பகுதி, மாட்டாங்குப்பத்தில், தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் சீனிவாசன் ஏற்பாட்டில் சிறப்பு மருத்துவ முகாமை நேற்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வி.பி. பொன்னரசு மற்றும் பலர் உள்ளனர்.




சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் தலைமையில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 5000 குடும்பங்களுக்கான நிவாரண பொருட்களை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், கலைஞர் நகர் தெற்கு வடக்கு பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா மற்றும் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன் பா.வாசுகிபாண்டியன் திருமதி ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., ஆர்.சசிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.6 ஆயிரம் நிவாரணம் வழங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

# புயல் நிவாரணம் குறித்த சந்தேகங்கள் தீர்க்க கட்டுப்பாட்டு அறை!

## உணவுப்பொருள் வழங்கல் - நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஏற்பாடு!

சென்னை, டிச.17-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று வேளச்சேரியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000/- நிவாரணத் தொகை வழங்கி தொடங்கி வைக்கிறார்.

மிக்ஜாம் புயல் நிவாரணம் குறித்த சந்தேகங்களை பொது மக்களுக்கு தீர்க்க கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) வழங்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க ஏதுவாக டோக்கன்கள் வீடுவீடாக சென்று விநியோகிக்கப் பட்டு வருகிறது. டோக்கன்கள் கிடைக்கப்பெற்றவர்கள், அதில் குறிப்பிட்ட தேதியிலும், நேரத்திலும், குறிப்பிட்டுள்ள நியாய விலைக் கடைக்கு சென்று ரூ.6000/- பெற்றுக்கொள்ளளாம். டோக்கன்கள் கிடைக்கப்பெறாத மற்றும் குடும்ப அட்டை இல்லாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நியாய விலைக் கடைகளில், அதற்கென உரிய படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்..

முதலமைச்சர் அவர்கள் இன்று (17.12.2023) சென்னை, வேளச்சேரி, அஷ்ட லட்சுமி நகரில் உள்ள நியாய விலைக்கடையில் காலை 10.00 மணிக்கு மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/- நிவாரணத் தொகை வழங்கி தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து மற்ற நியாய விலைக் கடைகளில் காலை 10.15 மணிக்கு நிவாரணத் தொகை வழங்கப்படும்.

அடுத்து வரும் நாட்களில், நியாய விலைக்கடைகளில் முற்பகல் 9.00 மணி முதல் 1.00 மணி வரையும், பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரையும் நிவாரணத் தொகை மற்றும் படிவம் வழங்கப்படும்., மேற்படி நிவாரணத் தெகை பொதுமக்களுக்கு எவ்வித புகாருக்கும் இடமின்றி வழங்கிடவும், புகார் எழும் சூழலில், அதனை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு நல்கிடவும் ஏதுவாக சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் அமைந்துள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அலுவலகத்தில் 17.12.2023 முதல், காலை 8.00 மணி முதல் இரவு 8.0 மணி வரை கட்டுப்பாட்டு அறை செயல்படும்.

பொதுமக்கள் நிவாரணத் தொகை குறித்த தங்களது சந்தேகங்களை 044--2859 2828 மற்றும் 1100 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு கேட்டறியலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீதிபதிகளுக்கு தீர்ப்புரை எழுதத் தகுதியில்லையா?

# உயர்நீதிமன்றங்கள் - உச்சநீதிமன்றத்தில் பன்முகத் தன்மை காக்கப்பட வேண்டும்!

## நாடாளுமன்ற மாநிலங்களவையில் - கழக உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.17-

நாடாளுமன்ற மாநிலங்களவையில், 'தேவையற்ற சட்டங்களை ரத்து செய்யும் மசோதா' மீதான விவாதத்தில், பேசிய கழக உறுப்பினர் பி.வில்சன் "உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் பன்முகத் தன்மை காக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் பி.வில்சன் எம்.பி., ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

நான் எழுப்புக்கூடிய மற்றுமொரு முக்கிய பிரச்சினையும் இருக்கிறது. அது நீதித்துறையில் சமூக பன்முகத்தன்மை இல்லை என்பதேயாகும்.. உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளின் எண்ணிக்கை அல்லது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளின் பிரதிநிதித்துவத்தைப் பார்க்கும்போது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் சமூக பன்முகத் தன்மை இல்லை.

சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தினால் நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்ட தகவல்களைப் பாருங்கள். 2018 முதல் 2029 வரை எடுத்துக்கொண்டால், சுமார் 80% பேர் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்றே அறியப்படுகிறது. ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள்.. அந்த சமூகத்தின் பெயரை குறிப்பிட விரும்பவில்லை.. மீதமுள்ள 20% பேர் மட்டுமே, பிற்படுத்தப்பட்ட மற்றும் எஸ்.சி/எஸ்.டி சமூகத்தைச் சார்ந்தவர்கள்..

மேலும், உச்ச நீதிமன்றத்தில் இந்த நிலை இன்னும் மோசமாகும்.

அவைத்தலைவர்: நீங்கள் உங்களுடைய கருத்தினைக் கூறிவிட்டீர்கள்.. மிக அழுத்தமாக கூறியிருக்கிறீர்கள்..

பி.வில்சன்: என் கருத்தை மட்டுமே இங்கு பதிவு செய்கிறேன். மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி.. இத்தகைய பிரதிநிதித்துவத்தை அவர்கள் ஏன் கருத்தில் கொள்வதில்லை ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்



சார்ந்தவர் நீதிபதி ஆவதில் என்ன தவறு.. அவரால் தீர்ப்பு களை வழங்க முடியாது என்று நினைக்கிறீர்களா நான் இரண்டு விஷயங்களைப் பார்க்கிறேன். அதாவது கொலீஜியமானது மற்ற வகுப்புகளைச் சேர்ந்த தகுதியான ஒருவரை அடையாளம் காணத் தவறிவிட்டது அல்லது மற்ற வகுப்புகளைச் சேர்ந்த திறமையான நபர்களை அடையாளம் காண்பதில் கொலீஜியம் ஆர்வம் காட்டவில்லை.

எனவே, இத்தகைய விஷயங்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய உரிய நேரம் இதுவாகும்.. மசோதாவின் மீது உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி!

அவைத்தலைவர்: விவாதத்தின் மீது பதிலுரை அளிக்க அமைச்சர் அவர்களை அழைப்பதற்கு முன்பு, சட்டம் இயற்றுவது என்பது மிகவும் தீவிரமான விஷயம் என்று நான் கூறுவேன்.. சட்டம் இயற்றும் பொறுப்பு நம்மிடம் மட்டுமே உள்ளது. இதில் இரண்டு வேறுபட்ட பிரிவுகள் உள்ளன. அரசியலமைப்பின் உயர் சிற்பியான பாராளுமன்றமானது, அரசியலமைப்பில் சில மாற்றங்களைச் செய்தால், அதுவே இறுதியானது. நிர்வாகத் துறையாக இருந்தாலும் சரி, நீதித்துறையாக இருந்தாலும் சரி எந்த முகமையும் அதில் தலையிட முடியாது. ஆனால், சட்டம் என்று வரும்போது, நீதித்துறையானது, நீதித்துறை மறு ஆய்வு மூலம் தலையிடும் வழிமுறை உள்ளது.

ஏனெனில் ஒவ்வொரு சட்டமும் அரசியலமைப்பு விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். எனவே, விஷயங்கள் மிகவும் தெளிவாக உள்ளது. அரசியலமைப்பு விதியைப் பொறுத்தவரை, நாடாளுமன்றத்தில் இருந்து வெளிப்படுத்தப்படும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு தலையிடும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. நாடாளுமன்றம் மட்டுமே மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் ஒரே அமைப்பாகும் ..அப்படியே இந்த தளமானது கட்டமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### டிச. -24 சேலம் இளைஞர் அணி மாநாட்டில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தினர் 500 வாகனங்களில் சென்று பங்கேற்பு!

## மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! க.சுந்தர் எம்.எல்.ஏ அறிவிப்பு!

சென்னை, டிச.17-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம், கலைஞர் பவள விழா மாளிகையில், மாவட்ட கழக அவை தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்டதுணைச்செயலாளர் க.செல்வம் எம்.பி, டி.வி.கோகுலகண்ணன், திருமதி.கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா. நாகன், டி.ஆர்.நாராயணன், எம்.எஸ்.சுகுமார், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி. கே.வி.தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள். வெளிக்காடுஏழுமலை, எஸ். டி.பிரேம்சந்த், பொன்.சசிக்குமார், எஸ்.உசேன், எஸ்.சிகாமணி, எஸ்.எழிலரசி, மதுராந்தகம் நகர செயலாளர். கே.குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கெ. ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், பி.சேகர், பொன்.சிவகுமார், சத்தியசாய், கே.கண்ணன், ஜி.தம்பு, எஸ்.ஏழுமலை, இ.சரவணன், பி.எம்.பாபு, சிற்றரசு எம்.எஸ்.பாபு. காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள். எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் நகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், எ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகநாதன், நிர்மலா, கு.சுப்புராயன், பேரூர் செயலாளர்கள். என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், வி. எழிலரசன், பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி. சம்யூக்த அய்யனார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், ஆ.செல்வி, நாத்திகம் நாராஜன், ஆ.சசிக்குமார், எஸ்.மாலதி, ஏ.நூருல் அமீன், நாகராஜன், வ.மலர் மண்ணன், வ.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ், சுந்தரவரதன், கே.ஏ.இளங்கோவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெமணி, க.பால்ராஜ், டி.சஞ்சய் காந்தி, ஆண்டோ சிலின் ராஜ், யுவராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர். க.சுந்தர், எம்.எல்.ஏ., தீர்மானங்களை விளக்கி பேசினார்.

வரும் டிசம்பர் 19 இனமானப் பேராசிரியரின் 102-வது பிறந்தநாளில் அவருடைய திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி கொண்டாடிட தீர்மானிக்கப் பட்டது.

கடந்த டிசம்பர் 3, 4 தேதிகளில் மிக்ஜாம் புயலினால் ஏற்பட்ட கனமழை காரணமாக சென்னை. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வரலாறு காணாத வகையில் பெரு வெள்ளம் ஏற்பட்டதோடு அனைத்து இடங்களிலும் நீர் புகுந்து மக்கள் வேதனைப்பட நேரத்தில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களும், அவருடைய ஆணையை ஏற்று அமைச்சர் உதயநிதி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் களத்தில் இறங்கி வெள்ள நிவாரண பணிகளிலும் துயர் துடைப்பு, பணிகளிலும் தங்களை ஈடுபடுத்தி மக்களுக்கு ஆறுதலாக செயல்பட்டார்கள்.

முதல்வர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக வெள்ளம் வடிந்த நேரத்தில் பெரும் சேதங்களை தவிர்த்ததோடு, அதிக உயிரிழப்புக்கள் ஏற்படாமலும் காத்துள்ளார் என்பதை ஒன்றிய அரசின் குழுவே பாராட்டியது, அரசின் திறமையான செல்பாட்டை வெளிப்படுத்துகிறது.

அதோடு மட்டுமல்லாமல், உடனடியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6000 ரூபாய் வெள்ள நிவாரணம் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கி உள்ளார். களத்தில் உழைத்த தூய்மை பணியாளர்களும் மின்வாரிய தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைவருக்கும் துயரத்தில் துணை நின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

சேலத்தில் வரும் டிசம்பர் 24 அன்று நடைபெறவுள்ள இளைஞர் அணியில் இரண்டாவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு மாநாடாக நடைபெற உள்ளது. அந்த மாநாட்டில் இளைஞர் அணி செயலாளரின் மாநில உரிமை முழக்கம் வெற்றி பெறவும் மாநாடு சிறக்கவும் நம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து 500 வாகனங்களில் பெருந்திரளாக இளைஞர்கள் பங்கேற்று சிறப்பிப்போம் என்று தீர்மானிக்கப்படுகிறது.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் வடக்கு தெற்கு ஒன்றிய கிளைக் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் (BLA–2) பூத் இளைஞரணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய செயலாளர் சந்தானம், நகர்மன்ற தலைவர் ஜெ.சண்முகம், மாவட்ட துணைச் செயலாளர் மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 650 கழக நிர்வாகிகளுக்கு கை கடிகாரத்தை மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்எல்ஏ வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்.க. செல்வம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் காஞ்சிபுரம் மேயர். திருமதி மகாலட்சுமி யுவராஜ் மற்றும் பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வேளச்சேரி 100 அடி சாலை, சசி நகரில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) .சங்கர்லால் குமாவத்,, மண்டல குழு தலைவர் இரா துரைராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை இயக்குநர். செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ. சங்குமணி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (16.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்6. 78வது வார்டு, சூளை. அங்காளம்மன் கோயில் தெரு. உமா சுராஜ் மஹாலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள ராஜா தோட்டம், குருசாமி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 1000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கினார். இந்த நிகழ்வின் போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் .கே.எஸ்.ரவிச்சந்திரன் , உள்ளாட்சி பிரதிநிதிகளைச் சேர்ந்த வேலு, .சுதாகர் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# பம்மல் வடக்கு - தெற்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! வே.கருணாநிதி - த.ஜெயக்குமார் அறிக்கை!

காஞ்சிபுரம், டிச. 17-

தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு - தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (17.12.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு பம்மல், எல்.சி.மஹாலில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தெற்குப் பகுதி கழகச் செயலாளர் - 1வது மண்டல குழுத்த லைவர் வே.கருணாநிதி தலைமை வகிக்கிறார். வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் திருநீர் மலை த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றுகி றார்!

கே.சந்திரன், எஸ்.கே.நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், க.சுந்தரமூர்த்தி, இரா. பாபுஜி, ப.காளேஸ்வரன், ஆர். உமாசங்கர், பா.டில்லி, துரை. இளங்கோவன், என்.பன்னீர் செல்வம், பா.கவிதா, பி.ஜெ. வேந்தன் என்.கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர். கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளர் டி. ஆர்.பாலு எம்.பி., குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் ச.ரமேஷ், ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், இரா.நரேஷ்கண்ணா, கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், பி.கே.ஏ.சத்தியபிரபு, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், அண்ணாவெங்கடேசன், வி.எஸ்.ஜெகன்நாதன், மு.இன்ப சேகர், என்.காந்தி, எச்.முகம்மதுஅப்பாஸ், எம். சாலா (எ) சுகுமாறன், பி.ஸ்ரீதர், பி.ஆண்டவன், ஏ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணிபிரபு, வாணிஸ்ரீவிஜயகுமார், சித்ராதமிழ்குமரன், கல்யாணி டில்லி, ரம்யாசத்தியபிரபு, எ. மதினாபேகம் சத்யாமதியழகன் சண்முகசுந்தரி ஜெயகுமார் சித்ராதேவி முரளிதரன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், வட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளா ட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகி கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர்கள் வே.கருணநிதி, திருநீர் மலை த.ஜெயக்குமார் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஏ.செந்தில்குமார், எஸ். வெங்கடேசன், எம்.சுரேஷ்குமார் நன்றி கூறுகின்றனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகின்றனர்!

# வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 பேருக்கு நிவாரணம்!

## காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு! த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, டிச.17 -

149வது வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி, வளசரவாக்கம் 149வது வட்டத்தில் 2000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை டி.ஆர்.பாலு எம்.பி., மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., 11வது மண்டல குழுத் தலைவர்மதுரவாயல் வடக்குப்பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. செல்வி ரமேஷ், எம்.சி. இன்று (17.12.2023, ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு 149வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் (சி.வி..கோயில் தெரு, ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம்) வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மதுரவாயல் தெற்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் மற்றும் பகுதி கழக துணைச்செயலாளர் வே.மதியழகன், ஆர்.சுரேஷ்பாபு, எம்.கிருஷ்ணமூர்த்தி, டி.என். கமலநாதன், திருமதி.குப்பு ராஜேந்திரன், எம்.குமார், பி.எஸ்.துரைசாமி, கே.சரவணன், எம்.ஏ.வி.சீனு. , எஸ். சுந்தரர்ராஜன், எஸ்.ஆறுமுகம், எம்.முரளி, எஸ்.அமல்ராஜ், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், ஆர்.விஜய், ஆர். வினோத், எஸ்.பரத், கே.ஜி. ஜெயவேல், எஸ்.குகா கார்த்திக், ஆர்.சிவலிங்கம், என். உடையப்பா, டி.மோகன், எம்.ஏ.வீரராகவன், டி.மோகனவேல், வி.டி.அரசு, எஸ். ரவி, பி.சேகர், ஏ.கணேசன், எம்.அமுல்ராஜ், பி.பொன் முத்துரமேஷ், சி.பாலமுருகன், ஆர்.அண்ணாமலை, டி.சித்ராதங்கராஜ், ஆர். எம். பழனியப்பன் , ஆர்.கல்யாண சுந்தரம், சி. சிவராமகிருஷ்ணன், எம்.சுரேஸ்மோசஸ், பி. கிருஷ்ணன், சுஜாதாந ரசிம்மன், என்.முருகேசன், வி. ஹேமந்த்குமார், எம்.கிருஷ்ணன், பி.சிவக்குமார், எஸ். அன்பழகன், எம்.சின்னு, எம். கார்த்திக், கே.எம்.சம்பத்குமார், எம்.சுரேஷ், ஸ்வீட் கிருஷ்ணன், எம்.ரவீந்திரன், கே.சரவணன்கிருஷ்ணமூர்த்தி, கே. அருள்குமார், ஆர்.தமிழ்காவ்யா, என். ராஜா, ஆர்.சந்திரகுமார், பாரதி மற்றும் கழக முன்னோடிகள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்வாறு வட்ட செயலாளர் த.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### திருவொற்றியூர் மேற்குப் பகுதி

# கழக நிர்வாகிகள் - சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் அறிக்கை!

சென்னை, டிச.17

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் , மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (17.12.2023, ஞாயிறு) மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ. ஆலோசனையின் பேரில் நடைபெற இருக்கிறது .

இது குறித்து பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் அறிக்கை வருமாறு:

திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனைக்கூட்டம் இன்று (17.12.2023 , ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் எண்ணூர் காசி கோயில் குப்பம் சமுதாய நலக்கூடத்தில் பகுதி கழக அவைத்தலைவர் ந.திருசங்கு தலைமையில் நடைபெற இருக்கிறது.

அது சமயம் முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறன்.

பொருள்: சேலம் மாநகரில் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற இருக்கிற கழக வது இளைஞர் அணி மாநாடு. கழக ஆக்க பணிகள்.

மேற்கண்டவாறு திருவொற்றியூர் மேற்குப் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில், மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு தலைமையில், மயிலை கிழக்கு பகுதி 171–வது வட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக வர்த்தக அணி மாநில செயலாளர் காசி.முத்து மாணிக்கம், பகுதி செயலாளர் எஸ்.முரளி, கீதா முரளி எம்.சி, செல்வி சௌந்தராஜன், வேலு சம்பந்தன், எஸ். சரவணன், வட்ட செயலாளர்கள் துரை பார்த்திபன், வே.கண்ணன் மற்றும் வர்த்தக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1,18,21, ஆகிய வார்டுகளில் நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தாமரைக்கண்ணன், மீனாட்சி ஜெய்சங்கர் ஆகியோர் ஏற்பாட்டில் நிவாரண பொருட்களை மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் அரிசி காய்கறிகள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார் உடன் மாவட்ட துணைச் செயலாளர் காயத்ரி ஸ்ரீதர், ப.ச.கமலேஷ், க.ஸ்ரீதர், எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மண்ணன், ஜெ.சுதாகர், ப.அன்பழகன் எம்.கே.சுகுமார், ஜெய்சங்கர் மற்றும் கா.ஷாஜகான், ஜெயசீலன், அம்மு பாலாஜிஉள்பட பலர் உள்ளனர்

### கழக விவசாய அணித் தலைவர் - முன்னாள் அமைச்சர்

# என்.கே.கே.பெரியசாமியின் சம்மந்தி ஏ.வி.சபாபதி கவுண்டர் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, டிச.17-

கழக விவசாய அணி தலைவரும், முன்னாள் அமைச்சருமான என்.கே.கே. பெரியசாமியின் சம்மந்தியும், ஒருங்கிணைந்த முன்னாள் ஈரோடு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான என். கே.கே.பி.ராஜா, டாக்டர் என் .ஆர்.தங்கவேல் ஆகியோரின் மாமனாருமான எ.வி.சபாபதி கவுண்டர் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (16.12.2023, சனிக்கிழமை) அதிகாலை இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு பரிமளா ராஜா, எஸ். வேணி என்கிற இரு மகள்கள் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு நேற்று (16.12.2023, சனிக்கிழமை) மாலை நடைபெற்றது.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# சேப்பாக்கம் திருவல்லிக்கேணி பகுதியில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்!

## தயாநிதி மாறன் எம்.பி., முன்னிலை! டாக்டர்.அ.சுபேர்கான் மேற்பார்வையில் நடைபெற்றது!

சென்னை, டிச.17-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சி.ஐ.டி. நகர் காட்டுகோவில் பகுதியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் மேற்பார்வையில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் முன்னிலையில் மாபெரும் மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இம்முகாமில், சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, துணைச் செயலாளர் ஆர்.என். துரை, வட்டச் செயலாளர் லைனர் பிரபு, கா.வே. மோகன், கமலா செழியன் மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

இந்நிகழ்வில், முன்களப் பணியாளர்களான தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று பயனடைந்தனர். இம்முகாமில் கலந்துகொண்டு பரிசோதனை மேற்கொண்ட மக்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகளை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் உடனடியாக வழங்கப்பட்டது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குடந்தை கே.கே. நீலமேகம்

**டிசம்பர் 17 (1965)**



**சுயமரியாதை இயக்க காலந்தொட்டு சீர்திருத்த பெரும் பணியாற்றியவர். 'குடந்தை பெரியார்' என அழைக்கப்பட்டவர்.**

**நீண்டகாலம் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி துணைத் தலைவராக இருந்தவர்.**

**தி.மு.கழகத்தின் துவக்க காலத்தில் பொருளாளர் பொறுப்பேற்றிருந்தவர்.**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற மதிப்பும், பாசமும் கொண்டிருந்தவர்.**

**"தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த தங்கம் – தன்மான இயக்கத்தின் தலைதாழாச் சிங்கம் – குடந்தைப் பெரியார் நீலமேகம் அவர்கள் மறையவில்லை; மனதில் நிறைந்துவிட்டார்" என தலைவர் கலைஞர் அவர்களால் 'முரசொலி' தலையங்கத்தில் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கங்கைகொண்டான் ஆ.கருப்பையா

**டிசம்பர் 17 (2013)**



**பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967–ல் நடைபெற்ற விருகம்பாக்கம் கழக மாநாட்டில் 'கங்கைகொண்டான்' தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றதோடு, அடுத்து நடைபெற்ற 1971 சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.**

**1953–ஆம் ஆண்டில் கங்கைகொண்டானில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவர், பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் பொறுப்பேற்று விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கங்கைகொண்டான் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது, சாதிசமய வேறுபாடற்று பஞ்சாயத்தில் தொண்டாற்றியதற்காக குடியரசுத் தலைவரிடம் விருது பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





நீலகிரி மாவட்டம் கோத்தகிரி – மேட்டுப்பாளையம் இடையில் ஏற்பட்ட மண்சரிவு பகுதிகளை தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் பார்வையிட்டனர். உடன் நெடுஞ்சாலைத்துறை செயலாளர், தலைமை பொறியாளர் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் திரு.வி.க நகர் வடக்கு பகுதி 71'அ வட்டம் டாக்டர்.அம்பேத்கர் கல்லூரிசாலை பி.எஸ்.மூர்த்திநகரில் உள்ள 1000க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர். பி.கே.சேகர்பாபு நிவாரண பொருட்களை வழங்கினார். ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர்.செ.தமிழ்வேந்தன், புனிதவதி, மா.ருத்ரமூர்த்தி உடன் இருந்தனர்.

### நிவாரணத் தொகை தொடர்பான தவறான வதந்திகளை நம்பாதீர்!

# ரூ.6000 நிவாரணத் தொகை வழங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று வேளச்சேரியில் தொடங்கி வைக்கிறார்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, டிச. 17 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் பாதிப்பு உள்ளான அனைவருக்கும் நிவாரணத் தொகை ரூ.6000/ வழங்கப்படும், ஆகையால் பொதுமக்கள் நிவாரணத்தொகை தொடர்பான தவறான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சென்னை சைதாப்பேட்டையில் நிவாரணப் பொருட்களை வழங்கி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

அது வருமாறு:

கடந்த வாரம் 04.12.2023 மற்றும் 05.12.2023 ஆகிய நாட்களில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட பாதிப்பு என்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தலா ரூ.6,000 உதவித் தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் பாதிப்புகளுக்குள்ளான பகுதிகளில் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்தவகையில் இன்றைக்கு 3வது நாளாக மேலே குறிப்பிட்ட 4 மாவட்டங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் டோக்கன்கள் விநியோகிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னையில் 1785 நியாய விலைக் கடைகளிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 850 கடைகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 80 கடைகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 135 கடைகள் என்று மொத்தம் 2850 நியாயவிலைக் கடைகளில் டோக்கன்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒரு சில சமூக வலைத்தள செயல்பாட்டாளர்களால், ஒரு சில ஊடகங்களில், சில வகையான அட்டைகளுக்குத் தான் உதவித்தொகை, சில அட்டைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படாது என்று செய்திகளை திரித்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் நியாயவிலைக் கடைகளில் அரிசி குடும்ப அட்டைகள், சர்க்கரை குடும்ப அட்டைகள், வெள்ளை அட்டைகள் என்று 3 வகைகளாக உள்ளது. இதில் வெள்ளை அட்டைகள் முகவரி ஆவணங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் அட்டைகளாகும். அதற்கு எந்த விதமான உணவு பொருட்களும் வழங்கப்படுவதில்லை.

அரிசி அட்டைதாரர்களுக்கு 100% உதவித் தொகை வழங்கப்படு கிறது. சர்க்கரை அட்டைதாரர்களுக்கு பாதிப்புகளுக்கு ஏற்ப வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னையில் உள்ள 16 வட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வருமான வரி செலுத்துவோருக்கு முதலில் வழங்க வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருமான வரி செலுத்துவோரும், பாதிப்பு கூடுதலாக இருக்கும் பட்சத்தில் விண்ணப்பிக்கலாம் என்று கூறியிருந்தார். நியாயவிலைக் கடைகளில் சர்க்கரை அட்டை வைத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவுறுத்தியிருந்தார். அதன்படி 2850 கடைகளிலும் டோக்கன்கள் விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் ரேஷன் கடையில் இருக்கும் விண்ணப்பத்தினை வாங்கி பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட கடையிலேயே தரலாம் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே அது சர்க்கரை அட்டையாக இருந்தாலும், வருமான வரி கட்டுபவராக இருந்தாலும் பாதிப்பு கூடுதலாக இருக்கின்ற விவரத்தை பூர்த்தி செய்து நியாய விலைக் கடைகளில் கொடுத்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒருசில சமூக வலைத்தளங்களில் இச்செய்தியினை தவறுதலாக திரித்து ஒளிபரப்பு செய்துக் கொண்டிருக்கிறார்கள். பாதிப்புக்கு உள்ளான மக்கள் அச்சப்பட தேவையில்லை. அனைவருக்கும் மழைக்கால நிவாரணம் கிடைக்கும்.

அதேபோல் வருமான வரி செலுத்தக்கூடிய உயர் வருவாய் உள்ளவர்கள் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். அதேபோல் அரசு பணியில் A பிரிவு பணியாளர்களான இந்திய ஆட்சிப்பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகிய பிரிவுகளைச் சார்ந்த உயரலுவலர்களுக்கும், B பிரிவு என்று சொல்லக்கூடிய அலுவலர்களான மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் போன்ற பிரிவுகளில் உள்ள உயரலுவலர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் வேளச்சேரி அஷ்டலட்சுமி நகரில் உள்ள நியாயவிலைக்கடையில் பயனாளி களுக்கு இன்று (17.12.2023) காலை 10.00 மணிக்கு ரூ.6000/ நிவாரணம் தந்து இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறார்கள்.

மேலும் உயிரிழப்புகளுக்கு ரூ.5 இலட்சம் என்றும், கால்நடைகள் பாதிக்கப்பட்டிருந்தாலும், படகுகள் சேதமடைந்திருந்தாலும் எவ்வளவு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. அதன்படி நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஓ.செ. விசுவநாதன்**
**டிசம்பர் 17 (2011)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னைக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது, 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீச்சட்டி ஊர்வலம் நடத்தினார்.

1968ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தபோது, தனது பகுதியில் தொ.மு.ச. கிளையினைத் துவக்கி, பின்னர் பெரியார் மாவட்ட த.நா.மின்வாரிய தொ.மு.ச. செயலாளராகப் பணியாற்றினார்.

அதன்பின்னர், பெருந்துறை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஈரோடு மாவட்ட துணைச் செயலாளராக தொடர்ந்து இருமுறையும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மேயர் பிரியா ராஜன் தலைமை! செ.தமிழ்வேந்தன் முன்னிலை!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் 2வது கட்டமாக 10,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச.17

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை கிழக்கு மாவட்டம் தி.மு.க சார்பில் திரு.வி.க நகர் வடக்குபகுதியில் உள்ள 71, 71அ, 72அ, 74, 74அ, ஆகிய வட்டங்களில் 2வது கட்டமாக 5 கிலோ அரிசி, போர்வை, பாய், ரொட்டி, பால், பிஸ்கேட், ஆகிய பொருட்களை 10,000 குடும்பத்தினருக்கு நலத்திட்ட உதவிகளை சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்வில் மேயர். பிரியா, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், புனிதவதி, சரிதாமகேஷ்குமார் பி.உதயசங்கர், பெரம்பூர். ஆர்.மகேஷ், எல்.பாண்டுரங்கன், மு.சரவணன், பகுதி அமைப்பாளர் சே.மணி மாறன்,

வட்ட செயலாளர்கள்: எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, எம்.இசட். அபோய், ஜி.கிருஷ்ண குமார், எம்.ஏ டீக்கா, பரிமளா சுரேஷ், தில்லை கதிரவன், புல்லட். கி.ரமேஷ், ஆர்.ராஜன், புவனவதி, கினார் ஆறுமுகம், வி.ஜெகன், சுவீட்.பாபு, சீனிவாசன், அண்ணாதுரை, மதுரை பிரகாசம், துரைசாமி, விஜயகுமார், க.எழிலன், வ.நாமதேவன், டி.ராஜி, சத்தீஷ், இளஞ்செழியன், ராஜராஜன், த.வே.ஏகாம்பரம், இ.எஸ்.ரவிச்சந்திரன், எஃப். செபாஸ்டின், சாக்ரடீஸ், ஜான்ரூவில், பி.ஜெயஸ்தாமஸ், சீஞ்சான், கிரிஜா, ஜி. சரண்ராஜ், மு.முகமதுரஃபி,

71. த.வே.ஏகாம்பரம், பாலாஜி, வி.வினோத், ஜமுனா குணசேகர், சங்கர், துரைபிரகாசம், லிங்கேசன், எஸ்.பாபு, ராமமூர்த்தி, ரவிகுமார், 71. சிவகுமார், உஷா, வி.நரேஷ், ஆர். நாராயணன், கார்த்திக், பல்சர் குமார், சஞ்சய்,மில்க் ரகு,சுரேஷ், முரளி, கஜேந்திரன், நீலகண்டன்,

71 (அ) ஜெ.மகிரசன், உமேஷ்குமார், பார்த்திபன், கவிதா, ரபியுல்லாகான் நந்தகுமார், விஸ்வநாதன், வ.சரவணன், நரேஷ். கி.சரவணன், லட்சுமி, சாந்தா வீரமுத்து, சபிதா, பாப்பு, மாரி, கார்த்திக், சரத், பிரேம், சசிகுமார், நிறைமொழி,

72. இன்பசேகர், ஆசை ராஜேந்திரன், சிவகுமார், செல்விராமகிருஷ்ணன், ஜெகதீசன், மகாதேவன், மோகன், பாண்டியன், எஸ். பாண்டியன், கலை சேகர், ஜி.வினோத், சுரேஷ், டேனியல், பாக்கியநாதன், கர்ணா, ராஜேஷ், ராஜசேகர், சுலோர் மணி, சகயாபாரதி கிரிஜா, பவானி, யுவராணி

72(அ) ந.வேலு, சிவஜானி, ஏ.சேகர், ருக்மணி, ரவிக்குமார், சங்கர், பிரபுதாஸ், வில்லியம்ஸ், குமார், யுவராஜ், கிரிஜா, தினேஷ், உஷா, சீமா, வே.கிரிதரன், அரவிந்தன். வேலு, சரண்ராஜ், சந்தோஷ், ஆகாஷ், வெங்கட்ரமானா, சகிலா, சந்தா, ரிட்டா, அங்கபாபு, செல்வகுமார், தியாகு.

74. வெங்கடேசன், சதீஸ், மதிமாறன், செண்பகவள்ளி, மகேந்திரன், சேகர், சீனிவாசன், அருள், நேசன், போஸ், யோகனந்தம், வினோத், ஞானசேகர், ஜெகதீஸ், விஜய், வினோத், டேனியல், ஏ. ஜான், வெங்கட், லூர்த், சேட்டு, ஷகிலா, கலை, அன்பு, அமுலு, கிரிஸ்டபர், குப்பன், ராம்மூர்த்தி, ராம்மூர்த்தி

74 (அ)ரவி பிரபு நிவாஸ், வள்ளல், சரளா,தினேஷ்குமார், பிரபாகரன், விஷ்ணு, சியோன் ராஜ், விஜயகுமார், மோகன்ராஜ், சி.ஆனந்த், ஆர்.மனோஜ்குமார்.

பாக நிலை முகவர்கள் இளைஞர் அணி நிர்வாகி கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கனிமொழி தனசேகரன் தலைமையில் - சென்னை தெற்கு மாவட்ட மகளிரணி சார்பில்

# 5000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினர்!

சென்னை, டிச.17-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் தலைமையில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 5000 குடும்பங்களுக்கான நிவாரண பொருட்களை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்.

இதில் சட்டத்துறை அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், கலைஞர் நகர் தெற்கு வடக்கு பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன் மாவட்ட துணை செயலாளர் பா.வாசுகிபாண்டியன் மாமன்ற உறுப்பினர் திருமதி ரத்னா லோகேஸ்வரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.சசிகுமார், கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ். உமாபதி, எஸ்.ரவி, பெ. தியாகு, அ.பாபு, கலைஞர் நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.விஜயகுமார், சா.நாகராசன், பி. விஜயலட்சுமி, து.ரஞ்சித் குமார் வட்ட கழக செயலாளர்கள் கே. சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், மு.அன்பழகன், இரா.செழியன், எஸ். மைக்கேல், மு.கோவிந்த ராசன், வீ.ஏ. ராஜா, எஸ்.பாஸ்கரன், தஞ்சை ஆர்.பாபு கலைஞர் நகர் தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் அய்யாவு பழனி, சோழா எஸ். ரவி, க.இளங்கோ, என்.ரவி. பா.தினேஷ்குமார், எஸ்.கருப்பசாமி, எ.ஜெகதீசன், கே. முருகன், கலைஞர் நகர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் சொ.ஜெயக்குமார், டி.எஸ்.பி.தென்னரசு, எஸ். சண்முகம், ச.ரா.சீனிவாசன், ஆர்.டி.நல்லேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### எழும்பூர் தொகுதி, 77வது வட்டத்தில்

# 2,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.17-

எழும்பூர் தொகுதி, 77வது வட்டத்தைச் சேர்ந்த 2,000 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரு மான வழக்கறிஞர் இ.பரந்தாமன், பதிமூன்றாவது நாளாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 77வது வட்டத்திலுள்ள டி.கே.முதலி தெரு, டிமலஸ் சாலை, அரகடா, துளசி நாயக்கன் தெரு, பழைய ஆட்டுத்தொட்டித் தெரு, குமாரசாமிராஜபுரம் 1, 2, 3வது தெரு, குருசாமி நகர் 8, 9, 10வது தெரு ஆகிய தெருக்களைச் சேர்ந்த 2,000 குடும்பத்தினருக்கு, வி.வி. கோவில், மாநகராட்சி ஆரம்ப சுகாதார மையத்தில் நடந்த நிகழ்வில் 2,000 பெட்ஷீட், 2,000 கைலி, தலா 5 கிலோ கொண்ட 2,000 அரிசிப் பை மற்றும் 4,000 கெல்லாக்ஸ் பாக்கெட் ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு மாவட்டப் பிரதிநிதி மு.கமலக்கண்ணன் முன்னிலை வகித்தார்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ. விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, அவைத் தலைவர் வெ.மருதன், 77வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் சி.ரமேஷ், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 58 (அ) வட்ட இளை ஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், சூளை நேரு, என். நந்தகுமார், விஜய தேவராஜ், ஏ.கவிதா, பி.சத்யகலா, சி. சதீஷ், ஜி.வி.சீனிகுமார், டி. கோபி, எஸ்.அமரசேகர், இ.பி.சலபதிராவ், என்.பாபு ராஜன், வி. ராமகிருஷ்ணன், எம்.கலா, பி.சாந்தி, கே.காமராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமை! மயிலை ஆர்.பாலு ஏற்பாட்டில்

# மாவட்ட வர்த்தக அணி சார்பில் 171வது வட்டத்தில் நிவாரண உதவிகள்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, - காசிமுத்து மாணிக்கம் - எஸ்.முரளி வழங்கினர்!

சென்னை. டிச.17-

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில்,மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு தலைமையில், மயிலை கிழக்கு பகுதி 171வது வட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக வர்த்தக அணி மாநில செயலாளர் காசிமுத்து மாணிக்கம், பகுதி செயலாளர் எஸ்.முரளி, கீதா முரளி எம்.சி,செல்வி சௌந்தராஜன், வேலு சம்பந்தன், எஸ். சரவணன் வட்ட செயலாளர்கள் துரை பார்திபன், வே.கண்ணன் மற்றும் வர்த்தக அணி நிர்வாகிகள் எஸ். சீனிவாசன், வே.கனிமொழி, லயன்.எஸ்.நந்தகுமார், ஏ. பாஸ்கர், கோ.சு.கருணாநிதி, ஆர்.சக்திவேல், மார்க்கெட் சுரேஷ் மற்றும்

171 வட்ட நிர்வாகிகள்: சுசீலா துரைராஜ், டில்லி ராணி, இராமகிருஷ்ணன், எஸ்.வெங்கடேசன், ஜெ. அசோக்குமார், கே.ஆர். குமார், கே.தங்கம், ஆர். எஸ்.மனோகர், பி.கோவிந்தன், கோ.தனசேகர், த.ஜெகதீஷ், மதுர, சி.செல்வம், என். விஸ்வநாதன், என்.கோபிநாத், கே.காசி பாண்டியன், எம்.பிரவீன்பாபு, ஸ்ரீதர், இரா. மோகன், எல்.ராணி, கிரிஜா, கலைச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



எழும்பூர் தொகுதி, 99 (அ) வட்டத்தில் 1,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2023) திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 30 தி.மு.க மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகைக்கான காசோலையை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2023) கழக பொருளாளர் – நாடாளுமன்றக் கழகக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் பிறந்த நாளையொட்டி அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2023) பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரியத்தின் தலைவர் காஜா அவர்கள் சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒரு மாத சம்பளத் தொகைக்கான காசோலையை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.12.2023) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் அவர்கள் சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒரு மாத சம்பளத் தொகைக்கான காசோலையை வழங்கினார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணைச் செயலாளரும், இளைஞர் அணி மாநில மாநாட்டு நிதிக்குழு உறுப்பினருமான டி.கே.பி.ரமேஷ் இளைஞர் அணி மாநாட்டு நிதியாக ரூ.5 லட்சத்தை தமது குடும்பத்தினருடன் சென்று சந்தித்து வழங்கினார்.




# கலைஞரும் நானும்

49

“கலைஞர் குறித்துச் சொல்கிறபோது அவரது துணிச்சலும், உடனடி எதிர்வினையும், நாட்டுக்கு நல்லது எனில், எதையும் தள்ளிப்போடக்கூடாது என்கிற வேகமும் என் நினைவுக்கு வரும்” எனப் பகிர்கிறார் சொற்பொழிவாளர் புலவர் இரெ. சண்முகவடிவேல்.

■ புலவர் **இரெ. சண்முகவடிவேல்,** சொற்பொழிவாளர்

## “இந்தி படித்திருந்தால் குமாஸ்தா ஆகியிருப்பேன் என்றார்!”



“முத்தமிழறிஞர் கலைஞரை அறியாதவர் தெரியாதவர் யார் இருக்க முடியும். நான் அவரை என் சிறு வயதில் இருந்தே அறிவேன். ஆனால், நேரில் அறிந்து பழகினேனா என்றால் குறைவுதான். அந்தக் குறைவான அனுபவத்திலும், நிறைவான அன்பை, உணர்வை அளித்தவர் கலைஞர் அவர்கள்.

நான் பள்ளிக்கூடம் படிக்கும் காலங்களில் என் மேடைப் பேச்சுக்குத் துணை நின்றது கலைஞரின் வசனங்கள்தான். அவருடைய ‘சாக்ரடீஸ்’ வசனம், ‘பராசக்தி’ நீதிமன்ற வசனங்களை மனப்பாடம் செய்து, நண்பர்களிடம் எடுத்து விடுவேன்.

### காய்ந்த இட்லிகள்

ஹனிபா அண்ணன் கட்சிக் கூட்டங்களுக்கு என்னை அழைத்துச் செல்லும் வழக்கம் கொண்டவர். 1956-ஆம் ஆண்டு திருவாரூர் சந்தைப்பேட்டையில் தி.மு.கழகப் பொதுக்கூட்டம். அதில் கலைஞர் பேசுகிறார் என்றதும், எனது சொந்த ஊரான நாகூரில் இருந்து, ஹனிபா அண்ணனுடன் அந்தக் கூட்டத்துக்குப் போனேன்.

அந்தக் கூட்டத்தில் சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர் என மூன்று பேரிடமும் கலைஞர் எங்களை அறிமுகப்படுத்தினார்.

அந்தக் கூட்டத்தில்தான் கலைஞரையும் நான் முதன்முதலில் பார்த்தேன். கூட்டம் முடிந்து, இரவு 11 மணி வாக்கில் பக்கத்தில் கருணை ஜமால் அவர்களின் அச்சகத்தில் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர் முன்பே வாங்கி வைத்திருந்த இட்லி காய்ந்து விட்டிருந்தது. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் சாப்பிட்டுவிட்டு பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது ஹனிபா அண்ணன் பேசுகையில், ‘தம்பி வடிவேலை, ஊர்ல இருந்து அழைத்து வந்தேன்’ என அறிமுகம் செய்தார்’. பள்ளி வயது சிறுவனுக்கு, பிரபலமாக வளர்ந்த தலைவர்களோடு நின்று, அவர்கள் பேசுவதைக் கேட்பது என்பது எவ்வளவு பெரிய வாய்ப்பு. அது எனக்கு வாழ்க்கை முழுக்க நினைத்துப் பார்க்ககூடிய அனுபவமாகக் கிடைத்தது.

### நன்றியுரை முடியும் வரை நின்றவர்

அதன் பின்னர், கலைஞர் முதன்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று திருவாரூர் வந்திருந்த சமயத்தில் பார்த்தேன. அப்போதுதான் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி இருந்தேன். மேடைகளிலும் அறிமுகமாகி இருந்தேன்.

திருவாரூர் முக்கியப் பிரமுகர்களை அழைத்திருந்த கலைஞர், ’இந்த ஊருக்கு உடனடியாக என்ன எதிர்பார்க்கிறீர்கள்?’ எனக் கேட்டார். அந்த நிகழ்வில் நானும் இருந்தேன். எல்லோருமே ஒரு கல்லூரி வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர். உடனடியாகப் பொருத்தமான இடத்தை முடிவு செய்து, அந்த இடத்துக்குச் சொந்தமான ஆதீனத்திடம் பேசி ஏற்பாடு செய்து விட்டார். கல்லூரி தொடங்குவதற்கான பொறுப்புகளையும் பிரித்துக் கொடுத்துவிட்டுத்தான் புறப்பட்டார். அவரது வேகம், பிரமிப்பை ஏற்படுத்தியது. அப்படித்தான் திருவாரூருக்கு கல்லூரி வந்தது.

அதன் பின்னர், அவரது 75-வது வயதில் பவழவிழாவை திருவாரூரில் பொதுமக்கள் இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்து, ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் இடம்பெற்றேன். அந்த நிகழ்ச்சிக்கு கலைஞர் வந்திருந்தார். பலரும் வாழ்த்துரை வழங்கிய நிலையில், கலைஞர் பேசி முடித்ததும் கூட்டம் கலையத் தொடங்கியது.

இறுதியாக, என்னை நன்றியுரை பேச அழைத்தனர். கலைஞர் மேடையில் இருந்து இறங்க ஆயத்தமான நேரத்தில், நான் பேசத் தொடங்கினேன். எனது பேச்சின் தொடக்கத்தைக் கேட்டு ஒருநொடி நின்றவர், மீண்டும் மேடையில் ஏறி, பேசிக்கொண்டிருந்த என் பின்னால் வந்து நின்று கொண்டார்.

**ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அந்த மனநிலையில் பேசாமல், தன் பெயரைச் சொல்லி பேசியதை கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. அவர்தான் கலைஞர்.**

நான் பேசி முடித்ததும், என் கையைப் பிடித்தவர் ‘ஏன் நீங்க முன்னரே கால் மணி நேரம் பேசி இருந்திருக்கலாமே’ என்றார். “அய்யா , இந்த வாய்ப்புதான் எனக்குக் கொடுத்தாங்க” என்றேன். அதற்கு அவர் ’அப்படித்தான் நடக்கும்’ எனக் கூறினார். என்ன நடந்திருக்கும் என ஊகித்து, அதைப் புரிந்து கொண்டார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். இறங்கிய தோதில் போனவர், மீண்டும் எனது பேச்சைக் கேட்பதற்காக ஏறியதில் எனக்கு மிகுந்த உவகை அளித்தது.

### இந்தி ஆசிரியருக்கு மரியாதை

**‘கலைஞரின் புகழுக்குக் காரணம் எழுத்தாற்றலா? பேச்சாற்றலா?’** என்கிற தலைப்பில் வள்ளுவர் கோட்டத்தில் ஒரு பட்டிமன்றம். பேராசிரியர் நமச்சிவாயம் நடுவராக இருந்தார். நானும் கலந்து கொண்டேன். கலைஞர் அப்போது முதலமைச்சராக இருந்தார். அரங்கில் கலைஞர், பேராசிரியர் என எல்லோரும் எதிரே அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றனர். நிகழ்ச்சியில், என்னை அறிமுகம் செய்கையில், ‘இவர் திருவாரூர்காரர்’ என நமச்சிவாயம் குறிப்பிட்டார். நிகழ்ச்சி முடிந்ததும் கலைஞரிடம் சொல்லிவிட்டு, செல்வதற்காகச் சென்றபோது, என்னைத் தனியே அழைத்தவர் ‘திருவாரூர் என்றார்களே, என்ன செய்துகிட்டு இருக்கீங்க’ எனக் கேட்டார்.



“அய்யா, நீங்க படிச்ச பள்ளிக்கூடத்தில் நான் வாத்தியார் வேலை பார்த்தேன்” என்றேன். அவர் படித்த திருவாரூர் பள்ளியில் நான் ஆசிரியராகப் பணியாற்றியதை அப்படிக் குறிப்பிட்டேன். அவர் உடனே “கொஞ்சம் முன்னாடியே நீங்க வந்திருந்தீங்க என்றால், நான் உங்களிடம் படித்திருப்பேனே” என அந்த இடத்தைக் கலகலப்பாக்கினார்.

அந்தந்த பொழுதுகளில் அவர் கையாளும் மொழி ஆளுமைக்கு இணையாக வேறு யாரையுமே சொல்ல முடியாது. அவரது நண்பர் தென்னவன் எனக்கு மிகவும் நெருக்கம். அடிக்கடி சந்திக்கின்ற நட்பு. அவர் கலைஞர் குறித்துப் பகிர்ந்து கொள்கின்ற சம்பவங்கள் அனைத்தும் அவர் அடைந்த உயரத்தைப் பறைசாற்றுவதாக இருக்கும். திருவாரூர் வருகையில், அவர் தனது பல நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதிலிருந்து அவற்றைக் கவனிக்க முடியும்.

ஒருமுறை, திருவாரூரில் ஆசிரியர்கள் கூட்டணி மாநாடு நடைபெற்றுள்ளது. முதலமைச்சராக இருந்த கலைஞர் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். அந்த நிகழ்ச்சியில் அவருக்குப் பாடம் நடத்திய ஆசிரியர் சேதுராம அய்யர் ‘வரவில்லை. அது குறித்து விசாரித்தவரிடம், அவர் ஓய்வுபெற்று விட்டதால் வரவில்லை என்று கூறி இருக்கின்றனர். ஓய்வுபெற்றால், கூப்பிட்டு மரியாதை செய்ய மாட்டீங்களா எனக் கேட்டதுடன், அந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சேது ராம அய்யர் வீட்டுக்கு நேரடியாகவே கலைஞர் சென்றுள்ளார்.

அங்கு சென்று, அவர்கள் வீட்டின் நிலைமையைக் கேட்டு அவர்களுக்கு வேண்டியதைக் செய்து கொடுத்துள்ளார். தனக்கு ஆசிரியராக இருந்தவர், நல்லது கெட்டதுகளைச் செய்தவர் என நினைவில் வைத்திருந்து வீடு தேடி சென்று உதவிய மாண்புக்கு என்ன பெயர் வைக்க முடியும்.

அதுபோல கலைஞருக்கு இந்தி பண்டிட் ஆக இருந்த சீனிவாச அய்யர், ‘நீ இந்தி படித்திருந்தால் டெல்லியிலும் சாதித்திருப்பாய் என அவர் வீட்டு நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்திருந்த போது’ கூறுகிறார். அதற்குக் கலைஞர், ’உங்க பேச்சை நான் கேட்காமல் இருந்ததால்தான் முதலமைச்சர் ஆனேன். படித்திருந்தால் ஏதோ ஒரு குமாஸ்தா வேலையில் இருந்திருப்பேன்’ என டைமிங் வசனம் பேசினார். அதையெல்லாம் கேட்கிறபோது, ‘அவர் நிகழ்வுகளைக் கையாளும் விதம்’ வியப்பாக இருக்கும்.

### பதவியைச் சொல்லாத பாங்கு

திருவாரூரில் அவரிடம் ஈடுபாடு கொண்டவர் கண்ணன், ‘ஸ்டார் போட்டோ ஸ்டூடியோ என்கிற ஸ்டூடியோ நடத்தி வந்தார். ஒருநாள் அவர் கடையில் நான் அமர்ந்திருக்கிறேன். அப்போது போன் வந்தது, கண்ணன் உள் அறையில் இருந்ததால், நான் எடுக்கிறேன். ‘நான் கருணாநதி பேசுறேன்யா’ என்றார்.

யார் எனத் தெரியாமல் கேட்டபோது,,‘ திரும்பவும் நான்தான்யா கருணாநிதி பேசுறேன், கண்ணன் இல்லையா’ என்றார். பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் கூட பதவியைச் சொல்லி பேசும் காலத்தில், ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அந்த மனநிலையில் பேசாமல், தன் பெயரைச் சொல்லி பேசியதை கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. அவர்தான் கலைஞர்.

...பகிர்வார்கள்

---

## மகளிர் பார்வையில் ஆசிரியர்!



தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் க.அன்பழகன் என 90 வயதைக் கடந்த திராவிட இயக்கத் தலைவர்கள் வரிசையில், இணைந்திருக்கிறார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். முதுமைக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, தந்தை பெரியார் காட்டிய வழியில் தளராமல் ஓடிக்கொண்டிருக்கும் தகைசால் தமிழரின், 91-வது பிறந்த நாளையொட்டி, ‘பகுத்தறிவுப் போராளி’ ஆசிரியர் கி.வீரமணி-91-ஆம் ஆண்டு பிறந்த நாள் மலர் - 2023’ எனும் சிறப்பு மலர் வெளியிடப் பட்டுள்ளது.

பெண் ஆளுமைகளின் பார்வையிலிருந்து பல்வேறு கோணங்களில் ஆசிரியரின் அயராத உழைப்பையும், சளைக்காத பொதுத் தொண்டையும், களைப்பற்ற களப்பணியையும் விவரிக்கிற ஆவணமாக உருவாக்கப் பட்டுள்ளது.

சம்பளம்கூட வேண்டாமென்று, வழக்கறிஞர் வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு ‘விடுதலை’ பத்திரிகைப் பணியை முழுநேரமாக ஏற்க ஆசிரியர் சென்னை வந்த போது பெரியார் அடைந்த மகிழ்ச்சி ஈடுஇணையற்றது. ‘இயற்கையில் இது எப்படிப்பட்ட மனிதரிடமும் எதிர்பார்க்க முடியாத விஷயம்’ என்றார் பெரியார். ‘திராவிட இயக்கத்தின் திருஞானசம்பந்தர்’ எனப் புகழ்ந்தார் அண்ணா.

பெரியாரின் மதிப்பீட்டுக்கும், அண்ணாவின் புகழ்ச்சிக்கும் அர்த்தமாகியிருக்கிறார் ஆசிரியர் என்பதை, மெய்ப்பிக்கும் விதமாக இந்த மலரில் பல அரிய செய்திகளை அடுக்கியிருக்கிறார்கள் பெண் ஆளுமைகள். கட்டுக்கோப்பான இயக்கமாக திராவிடர் கழகத்தை வழிநடத்துவது, கடைநிலைத் தொண்டருக்கும் சித்தாந்த சிந்தனைத் தெளிவைக் கொடுக்கும் திறன், சமகால அரசியலில் தெளிந்த நீரோடை போல வழிநடத்தும் தாய்க்குருவி என ஆசிரியரின் வியக்க வைக்கும் பண்புகள் மலர் முழுவதும் மணம் வீசுகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





சேகரன்

### பால்ய நண்பர்!

1967-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சராகவும், ப.உ.சண்முகம் உணவுத்துறை அமைச்சராகவும் இருந்த நேரத்தில், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் சேர்ந்து காட்டூரிலுள்ள அஞ்சுகம் அம்மையார் நினைவிடத்துக்கு வருகை தந்திருந்தார்கள். அப்போது திருவாரூரில் கலைஞரின் பால்ய கால நண்பரான என் தந்தை முருகையா அளித்த விருந்தில் மூவரும் கலந்துகொண்டனர்.

**-மு.சேகரன், கழக உறுப்பினர், திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.


அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் தலைமைப் பண்பு!

**1982-ஆம் ஆண்டு குடந்தையில் நடந்த நிகழ்ச்சியில் கலைஞரின் தலைமைப் பண்பை அழகாக விவரித்தார் பேராசிரியர். “மன்னார் குடியில் ஒருமுறை பேசிய அண்ணா, “நான் என்னுடைய உரையை முடித்துக்கொண்டு விடைபெற வேண்டியவனாக இருக்கிறேன். எனக்குப் பிறகு என்னுடைய தம்பி கருணாநிதி தொடர்ந்து பேசுவார். நான் வரலாற்றின் முன்பகுதியை எழுதியிருக்கிறேன், அதைத் தொடர்ந்து, தம்பி கருணாநிதி எழுதுவார்” என்றார். அண்ணாவின் முன்னுரையைத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார் கலைஞர், இனியும் எழுதுவார். கலைஞரின் தொண்டுக்கு தமிழ்நாடே ஈடு” என்றார் பேராசிரியர். மேடையில் அண்ணா கூறியதை தன் வாழ்வுக்கே அர்த்தமாக்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 331




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131